செந்தமிழ்

தொகுதி-90 செப்டம்பர்-96 பகுதி-9

திங்கள் இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர்: பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர்.தமிழண்ணல்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் செ.கந்தசாமி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ.தட்சிணாமூர்த்தி
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி.அரங்கசாமி
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பேரறிஞர் ம.ரா.போ.குருசாமி
செந்தில், த்ாமு நகர், கோயம்புத்தூர்.

பேரறிஞர் ச.மெய்யப்பன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

பேரறிஞர் சி.கதிர் மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேரறிஞர் கு.துரைராசு
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ.அ.மணவாளன்
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் க.ப.அறவாணன்
மத்திய பல்கலைக்கழகம், புதுவை.

பேரறிஞர் சூ.இன்னாசி
கிறித்துவத் தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பெரும்புலவர் இரா.இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேரறிஞர் சி.மொ.இராசேந்திரன்
செந்தமிழ்க் கலலூரி, மதுரை.

பேரறிஞர் நா.பொன்னனப்பன்
மதுரைக் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி பத்மா சீனிவாசன்
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேரறிஞர் நா.ந.மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

பேரறிஞர் எஸ்.எம்.கமால்
21,ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்.

பேரறிஞர் ஈ.கே.இராமசாமி
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பேராசிரியர் சே.அரிராமநாதன்
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம்
பேரறிஞர் நா.பாலுசாமி 336

2. விட்டிசையும் யாப்பும்
பேரறிஞர் செ.வை.சண்முகம் 340

3. அபிராமி அந்தாதி
பேரறிஞர் அ.தட்சிணாமூர்த்தி 353

4. விட்டிசையும் யாப்பும்
பேரறிஞர் செ.வை.சண்முகம் 357

5. கல்லெழுத்தும் புல்லெழுத்தும்
பேரறிஞர் அ.மா.பரிமணம் 363

6. 'கடுஞ்சூல்' - "முதற்சூல்"
தெ.முருகசாமி 374

எல்லோர்க்கும் தொல்காப்பியம்

பேரறிஞர். நா.பாலுசாமி

(தொல் - சொல் - வேற்றுமை இயல்)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சூத்திரம் : 79

(ஆறாம் வேற்றுமை)
ஆறா குவதே
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதனது இதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே

(ப.ரை)

அது எனப் பெயரிய - அது என்று கூறப்படும், வேற்றுமைக் கிளவி - வேற்றுமைச் சொல், ஆறு ஆகுவது - ஆறாம் வேற்றுமை உருபாகும், தன்னினும் - அது தன்னொடு பொருந்தியும், பிறிதினும் - பிறபொருளுடன் பொருந்தியும், இதனது - இப்பொருளினது, இது எனும் - இப்பொருள் என்று கூறப்படும், அன்ன கிளவி - அத்தகைய பொருளின் கிழமைத்தது - கிழமைத்தன்மையை உடையது. ஆறாம்

வேற்றுமை உருபு அது என்பதாகும். அது தற்கிழமைப் பொருளிலும் பிறிதின் கிழமைப் பொருளிலும் வரும் என்பதாம். அஃதாவது ஆறாம் வேற்றுமையின் பொருள் கிழமைப்பொருள் அல்லது உடைமைப் பொருள் என்பதாம்.

(வி.ரை)

பெயரிய - பெயரை உடைய, கிளவி - உருபு (சொல்) தன்னினும் - தற்கிழமைப் பொருளிலும். பிறிதினும் பிறிதின் கிழமைப்பொருளிலும் கிழமைத்து - கிழமை அல்லது உடைமைப் பொருளை உடையது. தன் - தன்னொடு ஒற்றுமை உடையபொருள் பிறிது - தன்னினும் வேறுபட்ட பொருள்.

(எ.டு)

விநாயகர் - அகவல் தற்கிழமை; விநாயகரும் அகவலும் ஒன்று பட்டவை. விராயகரைப் பற்றிய அகவல் பாட்டு. விநாயகரையும் அகவலையும் பிரித்துக்காட்ட முடியாது. எனவே இது தற்கிழமை.

கபிலர் அகவல் - கபிலரால் பாடப்பட்ட அகவல். இங்கு கபிலரையும் வேறுபடுத்தலாம். எனவே இது பிறிதின் கிழமை. தொல்காப்பியர் ஆறாம் வேற்றுமைஉருபு அது என்று ஒன்றுமட்டும் கூறுவர்; பின் வந்த நன்னூலால், அது, ஆது, அ, உடைய எனப் பெருக்கிக் காட்டினார். நன்னூலார் கொள்கையின் படி 'அது'உருபு அஃறிணைக்குமட்டும் வரும் (எ.டு) எனது மாடு, வீடு, மோதிரம், போன்ற அஃறிணைப் பெயர்களைப் பெற்று வரும். எனது மகன், மனைவி, தம்பி என்பனபோல உயர்திணைக்கு அது வாராது. 'என் மகன்' என்னும் தொடரை விரிக்கும் போது 'எனக்கு மகன்' என நான்காம் வேற்றுமை உருபையே விரித்தல் வேண்டும். தொல்காப்பியர் கொள்கைப் படி 'அது' உருபு இருதிணைக்கும் வரும். என் + மகன் = எனது மகன் என 'அது' உருபினை விரிக்கலாம். ஆனால் என் + மகன் = என்னுடைய மகன் என 'உடைய' என்னும் சொல்லுருபை விரித்தல் பொருத்தமுடையதாகும். இது காலத்தால் ஏற்பட்ட மாற்றம்.

சூத்திரம் 80

(ஆறாம் வேற்றுமையின் பொருள்கள்)

இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்

செயற்கையின் முதுமையின் வினையின் என்றா
கருவியின் துணையின் காலத்தின் முதலின்
ஒருவழி உறுப்பின் குழுவின் என்றா
தெரிந்து மொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்
திரிந்துவேறு படூஉம் பிறவும் அன்ன
கூறிய மருங்கில் தோன்றும் கிளவி
ஆறன் பால என்மனார் புலவர்.

(ப.ரை)

இயற்கை - இயல்பான தன்மை, உடைமை - தனக்கு உரிமையாக்கிக் கொள்ளல், முறைமை - உறவுபற்றிவரும் உரிமை, கிழமை - வழிவழியாக வரும் உரிமை, செயற்கை - முயற்சியால் பெறுவது, முதுமை - முதிர்ச்சி (அனுபவம்), வினை - செயல், என்றா - என்றும், கருவி - ஒருசெயலுக்கு மூலமாவது, துணை - துணையாதல், கலம் - ஓலைப்பத்திரம், முதல் - பொருள் (முதலீடு), ஒருவழி உறுப்பு - ஒரு முழுப்பொருளின் பகுதி அல்லது உறுப்பு, என்றா - என்றும், குழு - திரட்சி அல்லது கூட்டம், தெரிந்து மொழிச் செய்தி - ஆராய்ந்து செய்யப்படும் செய்யுள், நிலை - நிலைமை, வாழ்ச்சி - வாழ்தல் அல்லது உறைதல், திரிந்து வேறுபடும் - ஒருபொருள் மாறிவேறு வடிவம் கொள்ளுதல், என்றும், அன்ன பிறவும் - அவைபோன்ற பிறவும், கூறிய மருங்கில் - மேலே கூறப்பட்ட கிழமைப் பொருளில், தோன்றும் கிளவி - தோன்றும் சொற்கள் எல்லாம், ஆறன் பால் - ஆறாம் வேற்றுயிடத்த, என்மனார் புலவர் - என்று கூறுவர் இலக்கண நூலார். இயற்கை முதலாக வாழ்ச்சி ஈறாக வருவனவும், திரிந்து வேறுபடுவனவும், அவை போன்ற பிறவும் கிழமைப் பொருள் தரும் ஆறாம் வேற்றுமைக்கு உரியன என்பர் அறிஞர்.

(வி.ரை)

உடைமை - பெற்றிருத்தல், முறை - உறவுமுறை, கிழமை - தொன்றுதொட்டு வரும் உரிமை, செய்தி - செய்யுள், நிலை அப்போதைய நிலைமை, வாழ்ச்சி - ஓரிடத்தில் வசித்தலால் வருவது, செயற்கை - ஒருவனது முயற்சியால் வளர்த்துக் கொள்வது.

(எ.டு)

1.இயற்கை - சிங்கத்தினது இயல்பு, நீரினது தன்மை, நெருப்பினது வெம்மை போல வருவன.

2.உடைமை - வேந்தனது பொருள், மாதவியின் அணிகலன்
3.முறைமை - கன்றினது தாய், மறியது தந்தை.
4.கிழமை - இந்திரனது மருதம், வேந்தனது செங்கோல்.
5.செயற்கை - கம்பனது கவித்திறம், சேக்கிழாரது புலமை.
6.முதுமை - மாசாத்துவானது முதுமை, புலமையினது முதிர்ச்சி,(நங்கையது இளமை)
7.வினை - சிங்கத்தினது பார்வை, வீரனது நடை.
8.கருவி - குலாலனது திகிரி (சக்கரம்) இராமனது வில் முருகனது வேல்.
9.துணை - மாணவனது வணக்கம் கோழியினது துணை (சேவல்)
10.கலம் - மாதவியது முடங்கல், பாலினது கலம்.
11.முதல் - வணிகனது முதல்.
12.ஒருவழி உறுப்பு - யானையது துதிக்கை, கிளியது மூக்கு
13.குழு - நெல்லது குப்பை (குவை) பறவையது கூட்டம், வீரரது அணி.
14.நிலை - தந்தையது இயலாமை, பாரியது வளம், சாத்தனது வறுமை.
15.தெரிந்து மொழிச் செய்தி - வள்ளுவரது திருக்குறள், கபிலரது பாடல் (இது செய்யுட் கிழமை எனப்படும்).
16.வாழ்ச்சி - புலியது குகை, பாம்பினது புற்று, குருவியது கூடு.
17.திரிந்து வேறுபடுதல் - எள்ளினது சாந்து, மஞ்சளது தூள்.
18.அன்ன பிற - கொற்றனது கையொப்பம், கண்ணனது படிவம்.
இவ்வாறு ஆறாம் வேற்றுமை உருபு பல்வேறு கிழமைப் பொருள்களில் வரும்.

(தொடரும்.)

சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே!

பேரறிஞர். ச.அகத்தியலிங்கம்

1.1சங்க இலக்கியங்கள் உலக இலக்கியங்களுள் ஒன்று. மிகப் பழைமையானது. பாரம்பரியம் மிக்கது. எத்தனையோ நாடுகளிலும் மொழிகளிலும் இலக்கியம் தோன்றாத நேரத்தில் தோன்றிய தொன்மையும் முதுமையும் மிக்கது. கி.மு. ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாவது நூற்றாண்டுக்கிடைப்பட்ட காலக்கட்டத்தில் தோன்றியிருக்கலாம் என எண்ணுவர் சிலர். (Varadarajan 1969) இன்னும் சிலர் கி.மு.இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி.2வது நூற்றாண்டுகளுக்கிடைப்பட்டது என்பர் (Meenakshi Sundaram 1960 P.39) எனினும் இவ்விலக்கியங்களின் தோற்றத்தைக் கி.மு.இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.பி. முதல் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டது எனக்கருதுவதில் தவறில்லை. கி.பி. இரண்டாவது நூற்றாண்டில் தோன்றியது எனக் கருதப்படும் சிலப்பதிகாரம், அதற்கு முன்னரே தோன்றிவிட்ட திருக்குறள் போன்ற நூல்களுக்கு முன்னரே தோன்றியவை சங்க இலக்கியங்கள்.

சங்க இலக்கியங்களின் பலவேறு பண்புகளை அடிப்படையாக வைத்து அவற்றைச் சான்றோர் செய்யுள் (Kailasapathy. 1968.P.92) என்றும் செவ்வியல் இலக்கியம் (Sivaraja Pillai.1985.P.15) என்றும் பழைமையான, தொன்மையான இலக்கியம் என்றும் தமிழின் அகஸ்டஸ் கால இலக்கியம் (ஜான் சாமுவேல், 1995.ப.25) என்றும் பலபடக் கூறுவர்.

தமிழ் மொழியின், தமிழ்நாட்டின் பழைமையான இலக்கியம் மட்டுமன்று, இந்திய நாட்டின் பழைமையான இலக்கியங்களில் இதுவும் ஒன்று. இந்திய நாட்டில் ஆரியர்கள் வருவதற்கு முன்பே வாழ்ந்து வளர்ந்திருந்த திராவிட நாகரிகத்தின் பிரதிபலிப்பாக விளங்கும் பழைமையான இலக்கியம் இதுவேயாகும். பழைமைக்குப் பழைமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் உள்ள நிலையில் வேறு சில மொழிகளின் இலக்கியம் போலன்றி இன்றும் வளருகின்ற, வாழ்கின்ற, மக்களின் இலக்கியமாகவும் உள்ளது. 2500 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வளர்ந்து வரும் ஒரு இலக்கியம் இது. இந்நிலைமை பழைய இலக்கிய மொழிகளில் ஒரு சிலவற்றுக்கே உள்ளது.

சங்க இலக்கியங்கள் பாடுபொருளாலும் பாடப்பட்ட வகையாலும் பிற பழைய இலக்கியங்களிலிருந்து மாறுபட்டு ஒரு தனித்தன்மை பெற்று விளங்குகின்றன எனக் கூறலாம். இந்த இலக்கியங்கள், அதிலும் அக இலக்கியங்கள் ஒரு தனித்தன்மை வாய்ந்தவை. தற்சார்பின்றிப் (Objectivity) பாடப்பட்ட பண்புக்கு இவை ஒரு எடுத்துக்காட்டு. மனிதனையும் மனிதப் பண்புகளையும் பாடுவன நல்ல கவிதைகள் என்பதற்கேற்ப அமைந்துள்ளவை என எண்ணி நாம் மகிழலாம்.

இத்தகைய செம்மாந்த இலக்கியங்கள் உண்மையிலேயே செவ்வியல் இலக்கியங்கள்தானா என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

1.2 உலகமொழிகளைப் பற்றி ஆராயும்போது அவற்றுள் கிரேக்க மொழியும் இலத்தீன் மொழியும் ஹீப்ரு, சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளே செவ்வியல் மொழிகளாக உலக அரங்கில் அறிஞர்களால் கருதப்படுகின்றன என்பதைக் காணலாம். இதற்கு ஒரு முக்கிய காரணம் சிறந்த செவ்வியல்இலக்கியங்களைப் பண்டைக் காலத்… இவை பெற்றிருப்பதுதான் என்பதையும் உணரலாம். இந்நிலை… செவ்வியல் இலக்கியங்கள் என்றால் என்ன? அ… பண்புகள்தான் என்னென்ன? அப்பண்புகள் சங்க இலக்கி…

காணப்படுகின்றனவா? என்பதைப் பரக்க ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். இதுவே இக்கட்டுரையின் மையக் கருத்தாகும். கிரேக்க, லத்தீன் மொழி இலக்கியங்களை ஒத்து செவ்வியல் பண்புகளைக் கொண்டுள்ள இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் என்பதே இக்கட்டுரை காணும் முடிவும் ஆகும்.

செவ்வியல் இலக்கியங்கள் என்று கருதப்படும் மேலே குறிப்பிட்ட நான்கு மொழி இலக்கியங்களைப் பற்றியும் நாம் ஓரளவேனும் தெரிந்தாலன்றித் தமிழ் இலக்கியத்தின் பண்புகளும் அவற்றுடன் எந்த நிலையில் ஒப்பிடத்தக்கன என்றும் தெரியமுடியாத நிலையில் தான் அவைபற்றிக் குறிப்பிடப் படுகின்றன. குறிப்பாக அம்மொழிகளின் செவ்வியல் காலப் பகுதியிலுள்ள செவ்வியல் இலக்கியங்கள் பற்றியே கூறப்படுகின்றன. முற்பகுதி, பிற்பகுதி இலக்கியங்கள் ஒரு முன்னோட்டமாக அல்லது ஒரு பின்புலமாகவே காட்டப்படுகின்றன. வரலாற்று நிலையில் செவ்வியல் இலக்கிய வளர்ச்சியைக் காணுவதற்கு அது துணைபுரியும். அதே நேரத்தில் செவ்வியல் இலக்கிய ஏற்றத்திற்கு, ஆராய்ச்சிக்குத் துணைபுரிந்து நின்ற பாவியல் வரலாறும் பண்பும் குறிக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாகக் கிரேக்க, லத்தீன் மொழிப் பாவியல் நன்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. செவ்வியல் காலத்திலேயே இம்மொழிப் பாவியல் வல்லுநர்களும் வாழ்ந்து அவர்களே கூடச் செவ்வியல் இலக்கியங்கள் என்று கருதப்படுவதற்கும் காரணமாக இருந்தவர்கள். இதுபோன்ற பழைமையான மொழிகள் என்று கருதப்படும் சில மொழிகள் பற்றியும் ஒரு பின்புலமாகக் கூறப்படுகின்றன. பண்டைக் காலத்தில் உலகின் இலக்கியப் போக்கினைப் பற்றித் தெரிந்து கொள்ள இது உதவிநிற்கும். இவையனைத்தும் தமிழின் தொன்மையான இலக்கியமான சங்க இலக்கியத்தின் இடத்தை நாம் உணர்ந்து கொள்ளுவதற்கு உதவும்.

1.3 உலகில் மூவாயிரத்திற்கும் அதிகமான மொழிகள் உள்ளன. இவற்றில் ஒருசில மொழிகளே சிறந்த இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டவை. இவற்றுள்ளும் ஒரு சில மொழிகளே பழைமையான இலக்கிய வாழ்வைக் கொண்டவை. இவற்றுள்ளும் ஒரு சில மொழிகளே அன்று முதல் இன்றுவரையிலும் வழக்கற்று விடாமல் வாழ்ந்து வருபவை. இம்மொழிகளுள்ளும் ஒரு சில மொழிகளே உலக மொழி என்றும் உலக இலக்கியங்கள் கொண்டவை என்றும் மதிப்பிடத்தக்கவை. இவற்றுள்ளும் ஒரு சில இலக்கியங்களே செவ்வியல் இலக்கியங்கள் என்று உலக அறிஞர்களால் ...டப்படுபவை.

கி.மு. முதல் நூற்றாண்டில் இலக்கியம் கண்டிருந்த மொழிகளைப் பழைமையான மொழிகள் என்றும் அவ்விலக்கியங்களைப் பழைமையான இலக்கியங்கள் என்றும் கூறலாம். சுமேரியன், எகிப்தியன்,அக்கேடியன், பொனிசியன் போன்ற ஒரு சில மொழிகள் மிகப் பழைமையான மொழிகள். காலத்திற்கேற்ப இவை சிறந்த இலக்கியங்களையும் படைத்தவை. ஆனால் இம்மொழிகள் இன்று வாழும் மொழிகளாக இல்லை.

1.4.1 சுமேரிய இலக்கியங்கள்

சுமேரிய மொழி இலக்கியங்கள் மிகப் பழைமையானவை. இம்மொழியோ கி.மு. 3100லேயே எழுத்துச் சான்றுகளைப் பெற்றுள்ளது. தெற்கு மெசப்பட்டோமியப் பகுதியில் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே நயத்தக்க நாகரிகம் ஒன்றைத் தோற்றுவித்து வாழ்ந்தவர் இம்மொழியினர். எகிப்திய நாகரிகத்துக்கு முற்பட்ட நாகரிகம் இது. கூனிபார எழுத்தினால் எழுதப்பட்ட இலக்கியங்களைக் கொண்டது. தமிழைப் போன்றே இது ஒரு ஒட்டு மொழி. வடக்கு மெசப்பட்டோ மியாவில் வாழ்ந்திருந்த அக்கேடியன் மக்களின் தாக்குதலுக்கு உள்ளாகிப் படிப்படியாகத் தங்கள் மொழியினைஇழந்து இறுதியில் கி.பி. ஒன்றாவது நூற்றாண்டில் அம்மொழியே இறந்துவிட்டது. தமிழர்களுக்கும் இவர்களுக்குமிடையே மிகுந்த தொடர்பு இருந்தது குறிப்பிடத்தக்கது.

சுமேரிய இலக்கியம் பொதுவாகக் கடவுளர்கள் பற்றியும் மன்னர்கள் பற்றியும் உள்ளவை. பல பாடல்கள் பழைமையான புராணங்கள் பற்றியவை. கிடைக்கும் பாடல்களில் பழைமையானது நல்ல ஒரு தொழில் பாடல். மேலுலக வாழ்வு, தண்ணீரினால் ஏற்படும் அழிவு, வேதானங்கள் கொலை, வீரர்களின் செயல்கள், வீரக்கதைகள், கடவுளர்களின் காதல், மணம் போன்றவை பற்றிக் கூறுவன இவ்விலக்கியங்கள். சிறு சிறு காப்பியங்கள், துதிப்பாடல்கள் போன்றவை காணக்கிடக்கின்றன. இவைகள் கி.மு. 2500 ஐ ஒட்டிய காலப்பகுதியில் தோன்றியிருக்கலாம் என எண்ணலாம். இவையெல்லாம் இன்று ஏட்டில் உள்ளனவேயன்றி மக்கள் மத்தியில் நடமாடவில்லை.

1.4.2. எகிப்திய இலக்கியங்கள்

மிகப் பழைமையான நாகரிகங்களில் எகிப்திய நாகரிகமும் ஒன்று. கிரேக்க நாகரிகத்திற்கு முந்தியது இது. கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முன்னரே நைல் நதிக்கரையில் வாழ்ந்து வளர்ந்து வற்றாத

இலக்கியங்களை அள்ளிக் கொடுத்து நின்ற அருமையான நாகரிகம், ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள், பாப்பிரஸ் ஏடுகள், என்றின்னோரன்ன பல நிலைகளில் எழுதிவைத்த பெருமை கொண்டது. கி.மு. 2000க்கு முன்பே இங்கு கவிதைகள் மலரத் தொடங்கிவிட்டன எனக்கருதலாம். பழைய அரசுப் பரம்பரையைச் சார்ந்த மன்னன் ஒருவன்இறக்க விரும்பியதாகப் பாடிய பாடல் மிக அருமையானது என்பர். கி.மு. 2000 முதல் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த இம்மொழியில் கவிதையோ ஏராளம். கவிதை வடிவங்களோ பலப்பல. காப்பியங்கள், துன்னற்பாடல்கள் (Ode) துதிப்பாடல்கள் என்றின்னோரன்ன பலவிதமான வகைப் பாடல்கள் இம்மொழி இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. இவ்விலக்கியங்களில் இறப்பு பற்றியவையும் காதல் பற்றியவையும் ஏராளம் என்பர். கிரேக்க மக்களுக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பு ஏராளம். கிரேக்கப் புலவரான தீயோக்கிரிட்டஸ் (Theocritus) போன்ற புலவர்கள் இம்மொழிக் கவிதைகளைப் பின்பற்றி நின்றனர். இது போன்றே ஹீப்ரூ மொழிக்கவிதைகளும் இம்மொழிக் கவிதைகளிலிருந்து புத்துணர்வையும் உந்து வேகத்தையும் பெற்றன. எனினும் இம்மொழியும் என்றோ இறந்துவிட்ட நிலையில் இம்மொழி இலக்கியங்களும் ஆராய்ச்சிப் பொருளாக மட்டுமே உள்ளன.

1.4.3. அக்கேடிய இலக்கியங்கள்

அக்கேடிய மொழி ஒரு செயிட்டிக் மொழி. இதன்கண் இரண்டு கிளை மொழிகள் இருந்தன. ஒன்று அசிரியன்; மற்றொன்று பாபிலோனியன். இவ்விரண்டுக்குமிடையே அதிகமான வேறுபாடு கிடையாது. இவை வடக்கு மெசப்பட்டோமியா பகுதியில் வாழ்ந்தவை. சுமேரிய மொழி எழுத்தாகிய கூனிபாரம் எழுத்திலேயே இவ்விலக்கியங்கள் எழுதப்பட்டன. கி.மு. 3000ஐ ஒட்டிய காலப்பகுதியிலேயேஇம்மொழி இருப்பினும் கி.மு.2000 ஐ ஒட்டியே அசிரிய இலக்கியங்கள் தோன்றின. சுமேரியன் இலக்கியங்களைப் போலவே இம்மொழி இலக்கியங்களும் உள்ளன. துதிப்பாடல்கள், தோத்திரப் பாடல்கள், கடவுளர் பற்றிய பிறவகைப் பாடல்கள், சில காப்பியங்கள் போன்றவை காணப்படுகின்றன. பாடுவதற்காகவே இயற்றப்பட்ட பாடல்கள் இவை. இம்மொழியும் கி.மு. முதல் நூற்றாண்டையொட்டிய காலப் பகுதியில் அழிந்துவிட்ட நிலையில் இவ்விலக்கியங்களும் மக்கள் மத்தியில் வாழாத நிலையிலேயே உள்ளன.

1.4.4. பொனீசிய இலக்கியங்கள்

பொனீசிய மக்களும் மிகப் பழைமை வாய்ந்தவர்கள். இவர்களும் கி.மு. மூவாயிரத்தையொட்டிய காலப் பகுதியில் நாகரிகம் முதிர்ந்து வாழ்ந்தவர்கள். நல்ல வரலாறு படைத்தவர்கள். இன்றைய லெபனான் சிரியா ஆகிய நாடுகளின் மேற்குக்கரையோரத்திலுள்ள நீண்ட நிலப்பரப்பே பண்டைய பொனீசியா, எகிப்து, பொனீசியா, சைப்ரஸ் போன்ற இடங்களில் எல்லாம் பரந்து வாழ்ந்தவர்கள் இவர்கள்,இம்மொழி இலக்கியங்களும் பிற இப்பகுதி மொழி இலக்கியங்களைப் போலவே காணப்படுகின்றன. கடவுளர் பற்றிய சின்னஞ்சிறு காப்பியங்களும் துதிப் பாடல்களும் போன்றின்னோரன்ன இலக்கிய வகைகளைக் கொண்டிருந்தன இம்மொழி இலக்கியங்கள்.

இத்தகைய மிகப் பழைமையான மொழிகள் காலவெள்ளத்தில் அழிந்துவிட்ட நிலையில் அவை அறிவுப் பொருளாகவும் ஆராய்ச்சிப் பொருளாகவுமே உள்ளன. மொழிகள் பற்றியும் இலக்கியங்கள் பற்றியும் ஆய்வார்க்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணும் அளவுக்கு வளர்ந்திருந்த இவ்விலக்கியங்கள் அந்தக் காலச் சூழலில் சிறந்த இலக்கியங்களாகவே கருதப்படவேண்டும். நல்ல நாகரிகங்களின் பிரதிபலிப்பாகவே இவை வளர்ந்துள்ளன. எனினும் இன்று வழக்கில் இல்லையே.

1.5 நல்ல பழைமையும் சிறந்த இலக்கிய இலக்கணப் பாரம்பரியமும் உள்ள மொழிகளே செவ்வியல் மொழிகள். இன்னும் குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்ட வேண்டுமென்றால் செவ்வியல் இலக்கியங்களைப் பெற்றிருக்கும் பழைமையான மொழிகளைச் செவ்வியல் மொழிகள் என்று கூறலாம். ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ்,இத்தாலியன், ரஷியன் போன்ற மொழிகள் நல்ல இலக்கியங்களைப் பெற்றிருப்பினும் இவைகளெல்லாம் காலத்தால் பிந்தியவை. செவ்வியல் இலக்கியங்கள் ஒரு முக்கிய காரணமாயினும் பழைமையும் முக்கிய ஒருபண்பாகும்.

செவ்வியன்மை என்ற சொல் (Classicism) ஆங்கிலச் சொல். இச்சொல் "Classicus" என்ற லத்தீன் சொல்லிலிருந்து உருவானது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அலஸ் கெல்லியஸ் (Aulus Gellius) என்ற இலக்கண அறிஞன் இதுபற்றிக் கூறும்போது எழுத்தாளர்களைச் செவ்வியல் எழுத்தாளர்கள் (Scriptor classicus) என்றும் சாதாரண மக்களுக்காக எழுதும் எழுத்தாளர்களை "Scriptor proletarious" என்றும் இருவகையாக் கார்னேலியஸ் பிராண்டோ (Carnellius Franto) பிரித்து நிற்பார் என்றும் இவர்கள் முறையே

செம்மாந்த சிறந்த ஒரு சில மக்களுக்காக எழுதுபவர்களையும் சாதாரண சாமானியர்களுக்காக எழுதுபவர்களையும் குறித்து நிற்கும் என்றும் கூறுவார் (P&PP.P.137)

இலக்கியத்தில் பயன்படும் இச்சொல் ரோமச் சட்டத்திலிருந்தே எடுக்கப்பட்டது என்றும் அதிக வரி செலுத்துவோரைக் குறிக்கும் சொல்லாக "Classicus" என்ற சொல்லும் வரியே செலுத்தாதாரைக் குறிக்கும் சொல்லாக "Proletarius" என்பதும் பயன்படுத்தப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

செவ்வியன்மை என்ற சொல்லும் பல்வேறு பொருள்களில் பயன் படுகின்றது என்றும், "சிறந்த, முதல் தரமான" என்ற பொருளிலும் "பள்ளியில் பயிலும்" என்ற பொருளிலும் ரொமான்ஸ் மொழிகளில் மிகப் "பெரிய, நல்லதரமான" என்ற பொருளிலும் பயன்படும் என்றும் ஒரு மொழியில் சிறந்த இலக்கியப் பகுதியைக் குறிக்கும் சொல்லாகவும் கிரேக்க ரோம இலக்கியங்களை,மொழிகளைக் கலைகளை நாகரிகத்தைக் குறிக்கும் சொல்லாகவும் இது பயன்படும் என்றும் மேலும் அந்த நூல் குறிப்பிடும். (மு.157)

1.5.1 பொதுவாக இன்று கிரேக்க, ரோம, ஹீப்ரூ, சமஸ்கிருத மொழிகளைக் குறிப்பதாகவும் அம்மொழியினரின் கலை, கலாச்சாரம் போன்றவற்றைக் குறிப்பதாகவும் அம்மொழியின் பொற்கால, அல்லது சிறந்த இலக்கியக் காலப் பகுதியைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். மட்டுமன்றி எந்த மொழியிலும் சிறந்து நின்ற இலக்கியக் காலப் பகுதியைக் குறிப்பதாகவும் கருதலாம்.

கிரேக்க மொழியிலக்கியங்களையும் லத்தீன் மொழி இலக்கியங்களையும் நுணுகி ஆராய்ந்தால் இவ்வுண்மை விளங்கும். அவற்றில் காணப்படும் மேன்மை (Excellence) மகோன்னதமான மாண்புமிகு பண்பு, செம்மாந்த சீரிய நோக்கம் ஆகியவற்றை இச்சொல் குறித்து நிற்கும். கிரேக்க மக்களிடையே காணப்பட்ட வாழ்க்கையின் நோக்கம், குறிக்கோள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கம்பீர உணர்வு, மகத்தான வாழ்க்கை நெறி, பவித்திரமான பண்பு நிலை, இவற்றைப் பிரதிபலித்து ஆரவாரமற்ற, அமைதியான, அறிவுப்பூர்வமான கலையுணர்வு மிக்க இலக்கியங்களாக இவற்றைக் கண்ட நிலையில்தான் இவற்றைச் செவ்வியல் இலக்கியங்கள் என்றனர். இவ்விலக்கியங்கள் தெளிவு இருக்கும், தேக்கம் இருக்காது. மகோன்னதமான உயர்ந்த வாழ்வு வற்புறுத்தப்படும். பொதுமைப்பண்பு இருக்கும். தனிப்பட்ட ஒன்றின் ஆசையும் அபிலாஷையும் இருக்காது. அந்தந்த மக்களின் வாழ்வைப்

பிரதிபலித்து ஆனால் அதே நேரத்தில் மனித சமுதாயத்தின் பொதுப் பண்புகளை (Universal) வற்புறுத்தித் தற்சார்பு (Subjectivity) இன்றிப் பொதுமைப் பண்போடு (Objectivity) விளங்கும். எப்போதும் எக்காலத்தும் மனித சமுதாயம் படித்தின்புறும் நிலையில், காலம் கடந்து இனங்கடந்து வாழும் நிலைபேறுபெற்று நிற்கவேண்டும். இவ்விலக்கியங்கள் வெறும் மகிழ்ச்சிக்காக மட்டுமின்றி மிகச் சிறந்த வாழ்வுக்குறிக்கோள்களை வற்புறுத்தி நல்ல மனித வாழ்வுக்கு வழிவகுக்கும் நிலையில் இருத்தல் வேண்டும்.

முன்னர்க் கூறியபடி பல மொழிகள் சிறந்த இலக்கியங்களைக் கொண்டிருந்தாலும் ஓரிரு மொழி இலக்கியங்களையே செவ்வியல் இலக்கியங்கள் என்று கூறினர். இந்தப் பெருமை முதன் முதலில் கிரேக்க இலக்கியங்களுக்கும் பின்னர் ரோம இலக்கியங்களுக்கும் ஏற்பட்டது. இவ்விலக்கியங்கள் சிறந்த இலக்கியங்கள் ஆயினும் இவற்றிற்கு மட்டும் இந்த அந்தஸ்து ஏற்பட்டதன் காரணம் இவற்றைத்தான் முதன்முதலில் இந்த நோக்கோடு பார்த்து ஆராய்ந்தனர் அன்றைய இலக்கிய அறிஞர்கள்.

1.5.2. கிரேக்கப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் உரோமப் பேரரசு தலையெடுத்தது. கிரேக்க மக்களின் செல்வாக்கு உரோம மக்களின் வாழ்வில் எல்லா அங்கங்களிலும் வியாபித்து நின்றது. அரசு, காவல், கட்டுப்பாடு, மக்களின் வாழ்க்கை முறை, கலை, கலாச்சாரம், பண்பாடு, படிப்பு, இலக்கியம் போன்ற எல்லாத் துறைகளிலும் நீக்கமற நின்றது. கிரேக்கர்களை இவர்கள் வென்று நின்ற போதிலும் கிரேக்கர்களின் வானளாவிய வளர்ச்சியைக் கண்டு வியந்து நின்றனர் இம்மக்கள். அவர்களைப் போலவே தாங்களும் வாழ வேண்டும், வளர வேண்டும் என்று எண்ணினர். இதனால் எல்லாவற்றிலும் அவர்களையே பின்பற்றினர். அந்த நாட்டு அறிஞர்கள் பலரைத் தங்கள் நாட்டுக்குக் கொண்டு வந்து அவர்களை ஆசிரியர்களாகவும் ஆலோசகர்களாகவும் வைத்துக்கொண்டனர். (அகத்தியலிங்கம். 1968. ப.78) மட்டுமன்றிக் கரடுமுரடான தங்கள் மொழியும் கிரேக்க மொழியைப் போல் வளமானதாக வளரவேண்டும் என எண்ணினர். அந்த இலக்கியங்களைப் போன்று தங்கள் இலக்கியங்களும் இருக்க வேண்டும் எனவும் எண்ணினர். இதில் அவர்கள் வெற்றியும் கண்டனர். இந்த நிலையில்தான் கிரேக்க மொழி ஒரு வளமான மொழி என்றும் கிரேக்க இலக்கியம் செம்மாந்த செவ்வியல் இலக்கியம் என்னும் நிலையைப் பெறத் தொடங்கியது. விர்ஜில், வரோ, ஹொலாஸ் போன்றவர்கள் இதற்கு அந்த அந்தஸ்தை அன்றே தந்து

நின்றனர் எனக் கருதலாம்.

2.1கிரேக்க இலக்கியங்கள்

அறிஞன் சாக்கிரட்டீஸ் பேசிய மொழி கிரேக்கம். அனைத்துலகையும் ஆளக் கங்கணம் கட்டிய மாவீரன் அலெக்சாண்டர் பேசியதும் அதுவே. காப்பியப் பேரரசன் ஹோமர் எழுதிய மொழியும் கிரேக்கமே. பேரறிஞன் பிளேட்டோவையும் அவனைத் தொடர்ந்து இலக்கிய ஆய்வின் இதயமாக விளங்கும் அரிஸ்டாட்டிலையும் பெற்றெடுத்தப் பெருமை கொண்டதுவும் கிரேக்கமே.

இத்தகைய கிரேக்க மொழி உலக மொழிகளில் பழைமையான ஒன்று. (அகத்தியலிங்கம், 1968. (மு. 53) கி.மு.14ஆவது நூற்றாண்டு முதல் இன்று வரையிலும் இதன்கண் எழுத்துருவங்களைக் காணமுடியும். 34 நூற்றாண்டுகளாக, 3400 ஆண்டுகளாகத் தங்கு தடையின்றி வாழ்ந்து வளர்ந்து வருகின்ற ஒரு மொழியாகும். இன்று வாழும் மொழிகளில் இதில்தான் இத்தனை பழைமையைக் காணமுடிகின்றது. வேத இலக்கியங்கள் எனக் கருதப்படும் வேதங்கள் இவ்விலக்கியத்திற்கு முன்னரே தோன்றியிருந்த போதிலும் இது எழுத்துருவத்தை முன்னரே பெற்றுவிட்டது. கி.மு. பதினான்காவது நூற்றாண்டிலேயே லீனியர் A என்ற எழுத்து முறையைப் பயன்படுத்திய நிலையினைக் காணுகிறோம். அதன்பின்னர் லீனியர் B என்ற அசை எழுத்தையும் அது பயன்படுத்தியிருக்கின்றது. எனினும் கி.மு. எட்டாவது நூற்றாண்டில் ஒலி எழுத்து முறையை இது ஒட் டியிருந்தாலும் உயிர் எழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் தனித் தனியாகப் பிரித்து எழுதும் முறையை இம்மொழியினர்தான் தோற்றுவித்தனர். இன்று இவ்வெழுத்து முறை லத்தீன் அல்லது ரோம் எழுத்துமுறை வழியாக உலகம் முழுவதும் பரந்து நிற்பதைக் காண்கிறோம். இது இம்மொழியினர் உலக நாகரிகத்திற்கு அளித்த ஒரு பெரிய நன்கொடையாகும்.

2.2. கிரேக்க இலக்கியங்களும் மிகப் பழைமையானவை. கி.மு. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுமுதலே இதன்கண் எழுத்திலக்கியங்களைக் காணமுடியும்.

பலவகையான இலக்கியங்கள் இம்மொழியின்கண் உள்ளன. காப்பியம், உணர்ச்சிக் கவிதைகள், இரங்கற்பாடல்கள் (Elegy) ஆடல் அல்லது துள்ளற் பாடல்கள் (ode) நாடகம், முல்லை நிலப் பாடல்கள் (Pastorol) போன்ற பலவகையான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட இவ்விலக்கியப் பரப்பினை நான்கு பகுதிகளாகப் பிரிப்பர்.

1.பழங்காலம் (கி.மு.9 முதல் கி.மு.4ஆவது நூற்றாண்டு வரை)

2.செவ்வியல் காலம் (கி.மு.5ஆவது நூற்றாண்டு முதல் கி.மு. நான்காவது நூற்றாண்டு வரை)

3.ஹெலனிய காலம் (கி.மு.4ஆவது முதல் கி.மு. 1ஆவது வரை)

4.இக்காலம் (கி.மு.1முதல் இன்று வரை)

கி.மு. ஐந்தாவது நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியே பழங்காலம். 400 ஆண்டுக்காலப் பகுதி. இக்காலப் பகுதியில் காப்பியம், உணர்ச்சிப் பாடல்கள் போன்றவை தோன்றின. நாடகம், இரங்கல் பாடல்கள், வரலாறு, தத்துவம், பேச்சுக் கலையியல் போன்றவை எல்லாம் இருந்திருப்பினும் இக்காலப் பகுதியில் முன்னின்றவை காப்பியமும் உணர்ச்சிப் பாடல்களுமே ஆகும். கி.மு. நான்காம் நூற்றாண்டில் இவ்விலக்கியங்களைத் தொகுக்க முற்பட்ட போது மிக ஒரு சிறு பகுதியே கிடைத்தன என்பர்.

இக்காலப் பகுதியில் குறிபிடத்தக்கவைகள் ஹோமர் ஹெலியாட் ஆர்ச்சிலோக்கஸ், பாக்கிலைட், சொலான், மோனிட்ஸ் போன்றவர்கள். ஹோமர், கி.மு. எட்டு அல்லது ஒன்பதாவது நூற்றாண்டைச் சார்ந்தவர் எனக் கருதலாம். இவர் எழுதியதாகக் கருதப்படும் இலியட், ஆடிசி என்ற இரு பெருங்காப்பியங்களே கிரேக்க மொழி இலக்கியங்களில் பெருமையையும் சிறப்பினையும் காட்டப் போதுமானவை எனக் கருதலாம்.

வானளாவ வளர்ந்து நின்ற ஒரு சமுதாயத்தின் பண்பாட்டினையும் அதன் பாரம்பரியத்தினையும் அவர்கள் எண்ணங்களில் முகிழ்த்த கதைகளும் செவ்விய முறையில் சொல்லிச் செல்லும் விந்தையினையும் கவிதைப் பண்பையும் காப்பிய நெறியையும் காலம் காலமாக வளர்த்து வந்த வரலாற்றுப் பண்புகளையும் வாழ்க்கை நெறிமுறைகளையும் லாவகமாக இணைத்துப் பாத்திரங்களின் மேலேற்றி உணர்ச்சியும் உவகையும், இன்பமும் துன்பமும், அவலமும் அழுகையும் பீறிட்டு ஓடும் நிலையில் பாடிச் செல்லும் பாங்கும் புதியதொரு கவிதையுலகையே வடித்துக் காட்டும் வெற்றியும் இக்காப்பியங்களில் காணலாம். எத்தனையோ உலகப் பகுதிகளிலும் நாடுகளிலும் கவிதையோ காப்பியமோ பிறக்காத பன்னெடுங் காலத்திற்கு முன்பேயே இத்தகைய மாபெரும் படைப்புக்களைப் படைத்து நின்றபெருமை கிரேக்க நாட்டினருக்குண்டு.

இக்காவியங்கள் பாடிப்பாடி மகிழ்வதற்காகவே, மகிழ்விப்பதற்காகவே முதன்முதலில் ஆக்கப்பட்டவை என்றும் நீண்ட நெடுங்காலமாக வாய்மொழிப் பாடல்களாக வாழ்ந்தவையே என்றும்

அவற்றையே தொகுத்துச் சாகா வரம் பெற்ற காப்பியங்களாகச் சமைத்துத் தந்தார் ஹோமர் என்றும் எண்ணுவர் பலர் (Parry 1930, Lord 1968) இவ்வாறு உள்ள கவிதைகளைக் கதை (சொல்) கவிதைகள் (Narrative Potry) என்றும் அழைப்பார் (PPP,P553) இத்தகைய கவிதைகள் மிகப்பழங்காலத்திலேயே உள்ளன என்றும் சுமேரியா, எகிப்து போன்ற நாடுகளில் கி.மு. 200க்கு முன்பே உள்ளன என்றும் கி.மு.1000க்கு முன்பே கிரேக்க நாடுகள் போன்றவற்றில் தோன்றியுள்ளன என்றும் கூறுவர். சுமேரிய அக்கேடிய மொழிகளில் காணப்படும் கிலகமெஷ் காப்பியங்கள் மிகப் பழைமையானவை என்பர் (மு.ப. 514).

ஹோமர் ஒருவரா அல்லது இருவரா என்ற எண்ணமும் அறிஞர்களிடையே உண்டு. இலியடை எழுதியது ஒருவர் என்றும் ஆடிசியை எழுதியது மற்றொருவர் என்றும் எண்ணுவாரும் உளர். சாட்விக் தன்னுடைய நூலில் (1932.ப.20) இதுபற்றித் கூறும் போது ஹோமரைப்பற்றி, அவர் வாழ்க்கை பற்றி எதுவும் தெரியவில்லை என்றும் பொதுவாக வீரயுகப் பாடல்கள் பேர், ஊர் தெரியாதவர்களால் என்றோ எழுதப்பட்டவை என்றும் இவற்றின் நோக்கமே மகிழ்வூட்டுவதும் கொண்டாட்டங்களைக் கூறுவதும்தான் (Entertainment and celebration) என்றும் குறிப்பிட்டுச் சொல்லுவார். வழிவழியாக வந்த பாடல்களை ஒன்றாக்கி ஒருமுகமாக்கி அதற்கு வடிவம் கொடுத்துச் சிறந்த காப்பியங்களாக்கி நின்றவர் ஹோமர் எனலாம். கி.மு. ஒன்பதாவது நூற்றாண்டைச் சார்ந்த இவர் இலக்கிய நயம் தும்ப கவிதை நடையும் கொஞ்சி நிற்க வீர உணர்வும் செம்மாந்த சீரிய நிலையும் பொங்க இக்காவியங்களைப் படைத்து அழியாத புகழைத் தன்னுடையதாக்கிக் கொண்டார். மேனாட்டில் எழுந்த இலக்கியக் கர்த்தாக்கள் அனைவரும் இக்காப்பியங்களின் ஆர்வமும் அக்கறையும் காட்டியவர்களாகவே உள்ளனர். இவரைக் காப்பிய உலகின் தந்தை என்றே கூறுவர். இத்தனை பெருமையும் சிறப்பும் பெற்றிருந்தும் இதனைச் செவ்வியல் இலக்கியத்தில் அடக்குவதில்லை. இதனை (Heroic Poetry) வீரயுகப் பாடல்கள் என்பர்.

இக்காலப்பகுதியில் உணர்ச்சிப்பாடல்களும் ஏராளமாகத் தோன்றின. இக்கால முற்பகுதியில் காப்பியங்கள் என்றால் பிற்பகுதியில் உணர்ச்சிப் பாடல்கள். ஆர்சிலோக்கஸ் என்ற கவிஞர் எழுதிய பாடல்கள் சிறந்த பாடல்கள் என்பர். இவரைப் போன்றே அல்கயஸ் (Alcacus) ஹெசியாட் (700B.C) போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். ஹெசியாட் நீதிக்காப்பியங்களைப் பாடியுள்ளவர், இந்நிலையில் இவர், கவிதைகளின்பணி அல்லது

நோக்கம் மக்களை அறிவுறுத்துவதுதான் என்பர். பொயிஷியா விவசாய மக்களின் மேம்பாட்டுக்காகவே இவர் தன்னுடைய கவிதைகளை யாத்து நின்றார்.

இக்காலத்தின் இறுதிப் பகுதியில் துன்பியல், இன்பியல் நாடகங்கள் தோன்ற ஆரம்பித்தன. இவை அடுத்த காலப் பகுதியில் வனப்பும் வளமும் பெற்று வளர்ந்தன.

2.4 செவ்வியல் காலம்

முன்னர்க் குறிப்பிட்டபடி கி.மு. ஐந்தாவது நூற்றாண்டு முதல் கி.மு. நான்காவது நூற்றாண்டு வரையுள்ள இருநூறு ஆண்டுகாலப் பகுதியே கிரேக்க இலக்கியங்களின் செவ்வியல் காலப் பகுதியாகக் கருதப்படுகின்றது. இக்காலப் பகுதியில்தான் சிறந்த புலவர்களும் உலகப் பெரும் பாவியல் விற்பன்னர்களும் தோன்றினார்கள். பழங்காலத்தில் வேர்விட்டு வளர்ந்த இலக்கியங்கள் பூத்துக் குலுங்கிக் காயும் கனியும் கண்டு செழித்து நின்றன. இக்காலப் பகுதியில்தான் கிரேக்க இலக்கிய உலகில் ஒரு திருப்புமையம் ஏற்பட்டது. கி.மு. 9,8 ஆம் நூற்றாண்டுகளில் காப்பியங்கள் கோலோச்சி நிற்க 7, 6ஆம் நூற்றாண்டுகளில் உணர்ச்சிக் கவிதைகள் தலைசிறந்து நிற்கக் கண்டோம். ஆனால் கி.மு. 5,4 ஆம் நூற்றாண்டுகளில் நாடகங்கள் கிரேக்க இலக்கிய உலகத்தை ஆட்கொண்டு ஒரு புதிய வேகத்தையும் விறுவிறுப்பையும் உண்டுபண்ணின. இந்த மூன்று காலப் பகுதியும் கிரேக்க நாட்டுச் சமுதாயத்தில் நடந்த நடப்பினைப் படம்பிடித்துக் காட்டுவனாக அமைந்துள்ளன. சமுதாயத்தில் முன்னணியில் நின்ற செல்வர்களையும் செல்வந்தர்களையும் பாடி மகிழ்ச்சியூட்டி நின்ற காப்பியக்காலம். தனி மனிதனின் எண்ணத்தையும் ஆசைகளையும் அபிலாஷைகளையும் கூறித் தனிமனிதனின் முக்கியத்துவத்தைப் பிரதிபலித்து நின்றது உணர்ச்சிப் பாடல் காலம். தனிமனிதனின் உரிமை தலைசிறந்து நின்ற காலம் அது. அதன் பின்னர் இராஜிய அரசுகள் தோன்றி ஜனநாயகப் பண்பு வீறிட்டு நின்ற காலம் நாடக ஆட்சிக் காலம். தனித்தனிக் கவிஞர்கள் கதைகளையும் கவிதைகளையும் ஆக்கிய நிலை மாறி நாடகங்கள் மூலம் சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறு நிலைமைகளைச் சுட்டிக் காட்டி நின்றனர்.

பலதுறைகளிலும் அறிஞர்களும் கவிஞர்களும் உருவான காலம் இது. வரலாற்றுத் துறையின் தந்தை எனக் கருதப்படும் ஹெரடோட்டஸ் (485 - 425) துன்பியல் நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படும்

அஸ்சிலஸ் (525 - 456) கிரேக்க நாட்டின் கூட்டுப் பாடலின் (Chorus Lyric) நாயகன் எனப் போற்றப்படும் பிண்டார் (Pindar 518 - 445) தலைசிறந்த கிரேக்க நாட்டுத் துன்பியல் நாடக ஆசிரியன் சொப்போக்கிள்ஸ் (Sopoceles 496 - 406) யூரிப்பைட்ஸ்(Euripides 484 - 406) பேன்றவர்கள் வாழ்ந்த வளமான காலம் இது.

துன்பியில் நாடகங்களை பெருவாரியாக வழங்கிய காலப்பகுதி காப்பியத்திலிருந்து உணர்ச்சிப் பாடல்களும் அவற்றிலிருந்து கூட்டு உணர்ச்சிப் பாடல்களும் அவற்றிலிருந்து நாடகங்களும் எழுந்தன.

2.4.1. கூட்டு உணர்ச்சிப் பாடல்கள் மிகச் சிறந்த வகை இலக்கியங்களாகக் கருதப்பெற்றன. டயோனிஸஸ் என்ற தெய்வத்தின் (வருடத்தின் இறப்பு மறுபிறப்புக்கான தெய்வம்) வழிபாட்டுக்காக இப்பாடல்கள் பாடப்பட்டன.

(தொடரும்.)

அபிராமி அந்தாதி

ABIRAMI ANTHATHI

பேரறிஞர். அ.தட்சிணாமூர்த்தி

அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்ற நெஞ்சே யிரங்கேல் உனக்கென்குறையே!

Abirami is endowed with a peerless beauty!
The great Vedas by their constant association
Have caused her lotus - feet ruddy!
She is really a flowery creeper bearing the beautiful name Yamala!
She adorns Her head with the moon-baby great and cool!
She being thy saviour, thou need not worry
And no harm will be fall the oh, my heart suffering the loss of brahmanandha!

71

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கில்
நின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியளாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே!

Oh Soft-mielned Abirami!
Thou have a waist more slender than the lighting flash
That appears in the expansive heavens!
Lord Shiva adorned his matted hair
with Thy lotus- feet and got His wish fulfilled,
I adore those sacred feet to get my sins removed!
Should I be born again on this earth
Whose will be the blame if not of Thee?

72

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைக ணான்கொளி செம்மையம்மை
நாமம் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே!

Mother Thiripurasundari presented Herself
Before the Bhairavas, who worshipped Her at mid-night
With Her Kadambu garland, the five flower - arrows, sugarcane bow
Her sacred feet, four ruddy hands
The roseate Lusture of Her body
And Her three eyes that are meant for our protection!

73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும் பொற்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே!

The Sacred feet of Abirami are glorified
By the three - eyed Lord, the sacred Vedas,
Sri Narayana and Lord Brahma!
Those who seek refuge in those feet,
Considering them to He all for them
will abide as Indira in the grove of Kalpak,
Provided with golden couch
And enjoy the melody of the Celestial damsels!

74

தங்குவர் கற்பக தாருவி னீழலிற் றாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்

கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே!

Those who contemplate the sacred form of Abirami,
Whose womb begot the vaulting mountains,the saline oceans
which throw up waves and the fourteenfold world
Will attain Indirahood and reside beneath the shade of the Kalpak tree!
They will sure skip the neverfailing birth
And no mother will conceive them further!

75

குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே!

Oh wielder of five flowery darts!
Thou have taken for Thyself the left half of the Lord
Whose matted hair is adorned with the fragrant wreath of Konrai flowers,
That drip with honey by the buzzing bees!
Comprehending Thy mind, I`ve painted in mine mind
Thy great beauty in full
And thus blocked the way of Death!

76

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே!

Oh Abirami! Thou art glorified by the flawless Vedas!
They call Thee Bhairavai, Panchavi, Pasangusai,
Panchapani, Great Chandikai that takes
As offerings the evil lives,
Kali, Vairavi the mistness of the glowing arts,
Mandali, Malini, Sooli and Varaki!
The wise worship Thee by chanting these sacred names!

77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப வபிராம வல்லி யணிதரளக்

கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே!

Liana - Like Abirami has a pair of breasts resembling
Shapely seppus and golden Kalasas!
I`ve painted into mine eyes,
Her pearly ear-jewels embedded with diamonds and Koppus,
The fleshy ends of Her eyes, coral - lips
And Her teeth that are lustrous like the moon!

78

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபடநெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே!

Oh Abirami of merciful eyes!
We have hearts to pursue the path
Of the sacred Vedas!
Then why should we have kinship
with the mean who wander everywhere
with purpose none and whose acts
Are highly sinful and who sink deep in the painful hell?

79

கூட்டியவா வென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
ஓட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணு மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே!

Abirami of boundless charm,
Who dances into the lotus of my heart
Blessed me with her slavehood
And caused all my karmas flee at once!
She condescend to present before me Her real form!
She caused me to act!
My heart and eyes feel elated!
these things are really of great wonder!

80

(தொடரும்)

தட்டச்சுப்பொறியில் அடக்கவில்லையா?

மேலும், தமிழினும் மிக்க எழுத்துக்களைக் கொண்ட தெலுங்கு, கன்னடம், மலையாளமேயன்றி, இந்தியும் எண்ணிக்கையைக் குறைக்கவோ, கணிப்பொறிக்கேற்ப மாற்றஞ் செய்யவோ முற்படவில்லையே!

கல்லும் புல்லும் எழுத்தின் களங்களாக இருந்த நிலை மாறி, தாள், எழுதுகோல், தட்டெழுத்து, உருளச்சு, செராக்சு, கணிப்பொறி என்னும் சாதனங்களின் பயனை எய்திய நிலை தோன்றியுள்ள இந்நாளில் தமிழின் வரிவடிவத்தில் புதிய மாற்றங்களைத் திணிக்க முற்படுவது தேவையற்றதாகும்.

விட்டிசையும் யாப்பும்

பேரறிஞர். செ.வை.சண்முகம்

(முன்இதழ்த் தொடர்ச்சி)

மூன்றாவது அடியின் பொருள் 'தெரு மக்களால் ஆரவாரிக்கப் (கேலி செய்ய) படுகிறார்கள் ' என்பது. எனவே அந்த அலங்காரத்தோடு தெருவில் நடமாடுகிறார்கள் என்பதும் பெறப்படுகிறது. இந்த அடி முதல் இரண்டடியிலிருந்து இரண்டு வகையால் மாறுபட்டுள்ளது கவனிக்கத்தகுந்து. அவையாவனக i)வாக்கிய அமைப்பு மாற்றம். முதல் இரண்டு அடியும் செய்வினை வாக்கியம். மூன்றாவது செயப்பாட்டு வினை வாக்கியம். ii)காட்சி மாற்றம். முதல் இரண்டு அடியும் ஒரு வீட்டில் ஒருவருடைய செய்கையின் வருணனை. மூன்றாவது அடி, தெருவில் பொது மக்களுடைய செயலின் வருணன்னை. எனவே இரண்டாவது அடியின் விட்டிசை அமைத்தது நாம் எதிர் பார்க்காத விதமாக வாக்கிய அமைப்பும், காட்சியின் இடமும் மாற்றி நம்மைச் சிந்திக்க வைக்கிறது. உலகம் நாம் நினைக்கிறபடி வாழ்வதை வரவேற்பதில்லை.உலக மரபுக்கு மாறாக ஏதாவது செய்தால் கேலிதான் செய்கிறது. ஒருவன் உலகத்தாரின் கேலியையும் கெக்கலிப்பையும் பொருட்படுத்தாமல் இருப்பது அவனுடைய திட்டத்தின் தீவிரத்தையும்

அவனுடைய மன உறுதியையும் புலப்படுத்துகிறது. ஆனாலும் எந்த நோக்கத்துக்காக மன உறுதியுடன் இருக்கிறான் என்பது இதுவரை வெளிப்படுத்தாததும் மூன்றாவது அடியின் விட்டிசை எதிர் பார்ப்பை அதிகரிக்கிறது.

"பிறிதும் ஆகுப" என்ற கடைசி அடியின், முதல் பகுதி "வேறான்றாக ஆவார்கள்" என்ற நேர்ப்பொருளை உடையது. "இறப்பார்கள்" என்பதே அதன் சரியான பொருள். சாவார்கள் என்பது 'இடக்கர்' என்று கருதி இடக்கரடக்கராக பிறிதும் ஆகுப! என்று கூறப்பட்டிருக்கிறது. இங்கும் முந்தைய நிகழ்ச்சிகளுக்கான காரணத்தைக் கூறாமல் இன்னொரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. அதுவும் நேராகக் கூறாமல் இடக்கரடக்காகக் கூறியிருப்பது எதிர்பார்ப்பை மேலும் மேலும் தூண்டி விடுகிறது. கடைசி இரண்டு சீர்களே காரணத்தை விளக்குகின்றன. அதாவது இவை அனைத்துக்கும் காதல் தீவிரம் அடைந்ததே காதல் காரணம். எனவே முதல் மூன்று அடிகள் எதிர் பார்ப்புகளை அதிகப்படுத்தி இறுக்கத்தை (Tension) உண்டாக்கிக் கடைசி அடியின் விட்டிசையே இறுக்கத்தை விடுவிக்கிறது. வாசகருக்கு அவருடைய செயலுக்குக் காரணமும் தெரிவித்து நாமும் அவருடைய ஆழத்தையும், தீவிரத்தையும் உணர்ந்து கொள்கிறோம்.

இந்தப்பாடல் தலைவன் கூற்றாகக் கருதப்படுகிறது. இங்குத் தலைவன் மேலே குறிப்பிட்ட செயல்களைச் செய்யவில்லை, பிறர் அப்படிச் செய்வார்கள் என்று பலர்பால் எதிர் கால வினை முற்றுகளாகத்தான் கூறுகிறான். எனவெ அவனுடைய காதல் தீவிரம் எப்படிப்பட்டது என்பதை மறை முகமாகக் கூறியுள்ளான் என்பது பொருள்.

4.2.2.காலே

காலே பரிதப்பினவே கண்ணே

நோக்கி நோக்கி வாளிழந் தனவே

அகலிரு விசும்பின் மீனினும்

பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே

என்ற குறுந்தொகைப் பாடல் (44) மேலே குறிப்பிட்ட படி முதலடியின் விட்டிசையின் சிறப்பு பாட்டு முழுவதும் பரவியிருப்பதோடு விட்டிசை அமைப்பு நோக்கிலும் சிறப்புடையது. பொதுவாகச் சங்க கால

ஆசிரியப் பாக்கள் பெரும்பான்மையும் ஏகாரத்தில் முடியும். அந்த ஏகாரம் பாட்டின் இறுதியை உணர்த்துவதாகக் கருதப்படுகிறது. இந்தப் பாடலில் ஈற்றயலடியைத் தவிர ஏனைய மூன்று அடிகளிலும் ஏகாரம் வந்துள்ளது. ஆனாலும் முதல் சீரிலும், இரண்டாம் சீரிலும் இருக்கும் விட்டிசையை விட நான்காம் சீரில் இருக்கும் விட்டிசை அடிவிட்டிசை ஆனதால் ஒலி நிறுத்தம் அதிகமாக இருக்கும். அதாவது ஏகாரம் விட்டிசையின் வெளிப்பாடு என்றாலும், வரும் சீரின் தன்மையைப் பொருத்தே விட்டிசையின் அளவு மாறுபடும்.அதே சமயத்தில் ஏகாரம் இல்லாத சீரை விட ஏகாரம் இருக்கும் சீரில் விட்டிசை அதிகமாக இருக்கும்.

இந்தப் பாடலில் முதல் அடி ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியம். ஏனைய மூன்று அடிகளும் குறை வாக்கியங்கள். இருந்தாலும் இரண்டாவது அடியிலும், நான்காவது அடியிலும் வாக்கியம் முற்றுப் பெறுவதால் வாக்கியத்தின் அந்த இரண்டு அடிகளிலும் இறுதிவிட்டிசையோடு அடி விட்டிசையும் சேர்ந்துவிடுகிறது.

முதல் அடியில் உள்ள முதல் வாக்கியம் 'கால்கள் (மேலே நடக்க மாட்டாமல்) செலவு தடுமாறின ' என்ற பொருள் உடையது. அதாவது நீண்ட தூரம் நடந்ததால் அடுத்த கால் அடி எடுத்து வைக்க முடியாமல் கால்கள் பின்னுக்கு இழுக்கின்றன என்று பொருள். ' காலே ' என்பது ஏகாரமாக முடிந்துள்ளதால் அந்த ஏகாரம் இன்னும் சில உறுப்புகளின் செயல்கள் விளக்கப்படப் போகின்றன என்பதை உணர்த்துகிறது. 'பரிதப்பினவே' என்பதில் பினவே என்பது தனிச் சீராக வந்து இயலாமையையும் சோகத்தையும் மிகுத்துக் காட்டுகிறது. ஆனால் கண்ணே என்ற கடைசிச் சீரில் இருக்கும் விட்டிசை, அடி விட்டிசை ஆனதால் கூடுதல் எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறது. அதே சமயத்தில் கண்ணின் செயல் எல்லோருக்கும் தெரிந்ததே. எனவே எதிர்பார்ப்புக்கு ஏமாற்றம் கொடுக்காமல் அடுத்த அடிகள் இரண்டு வழியில் எதிர்பார்ப்புக்கு ஏற்றம் கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அவையாவனக: i) கால் எப்படி பரிதப்பின என்று விளக்காதவர் இங்கு (கண்ணுக்கு) இரட்டைத் தொடராக (நோக்கி, நோக்கி) அமைத்து விளக்கம் கொடுத்தது. இதை மொழி அமைப்பால் சிறப்பு எனக் கூறலாம். அதே சமயத்தில் நேரடி வினைப்பயனோடு இன்னோரு வினைப்பயனும் உண்டானதாக விவரித்தல் (உலகத்துப் பிறர், பலர் என்ற அறிவு ஏற்படல்). இதை அறிவுச் சிறப்பு என்று கூறலாம். எனவே 'நோக்கி நோக்கி ' என்ற இரட்டைத் தொடருக்கு ஏற்ப

இரண்டு விளைவு விளக்கப்படுகிறது.

காலின் செயல் 'பரிதப்பினவே ' என்று இரண்டு சீர். கண்ணின் செயல் நோக்கி நோக்கி வாளிழந்தனவே என்று நான்கு சீரகள். உற்றுப் பார்த்து உற்றுப் பார்த்து கண் ஒளி மங்கிவிட்டது. இங்கு நோக்கி நோக்கி என்ற இரட்டைத் தொடரும் குறிப்புப் பொருள் உடையது. சோமசுந்தரனார் (1955-65)' எதிரே சேய்மையில் (நெருக்கத்தில்) வருவாரை இவர் அவரோ என ஐயமுற்று அவர் அண்மையில் வருந்துணையும் கூர்ந்து கூர்ந்து நோக்குதல் ' என்று விளக்கியுள்ளார். பாட்டின் பிற்குறிப்பு செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது என்று குறிப்பிடுவது உற்றுப்பார்த்த விதம் கண் பார்வை மங்குவதற்கும் காரணம் என்பார் உரையாசிரியர். எப்படியானாலும் உற்று உற்றுப் பார்த்ததால் இன்னொரு பெரிய நன்மை ஏற்பட்டது. அது உடனடியாகக் கூறப்படவில்லை. எனவே வாளிழந் தனவே 'என்ற அடி விட்டிசை எதிர்பாராத திருப்பத்துக்குக் காரணம் ஆகிறது. அதே சமயத்தில் இங்கும் தனவே என்பதைத் தனிச் சீராக அமைத்ததும் சோகத்தின் மிகுதியைப் புலப்படுத்துகிறது.

அடுத்த அடியில் காட்சி மாற்றமும் ஏற்படுத்தப்பட்டு விட்டது. நிலத்தில் நடந்து சென்ற மனிதனின் வருணனையை விட்டு விட்டு, ஆகாயம் பற்றிய வருணனை துவக்கப்பட்டுள்ளது. அதாவது வாசகர் பார்வையும் இடம் மாற்றப் பட்டுவிட்டது. சந்தத்திலும் மாற்றம் ஏற்பட் டுள்ளதை வாய் விட்டுப் படித்தால் உணரலாம். முன் அடி, நேர் நேர், நேர் நேர், நேர் நிரை, நிரை நேர் என்று அமைய, இந்த அடி நிரை நிரை, நிரை நேர், நேர் நிரை என்று அமைந்திருப்பதும் குறிப்புப்பொருள் உடையதுதான். பரந்துபட்ட ஆகாயத்தை வருணிக்க நிரையசை அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

' அகன்ற பெரிய ஆகாயத்தின் நட்சத்திரங்களைக் காட்டிலும் என்பது மூன்றாவது அடியின் பொருள். இங்கும் ' மீனினும் என்ற சீருக்குப் பிறகு உள்ள அடி விட்டிசையும் என்ன கூறப் போகிறார் என்று வாசகரின் சிந்தனையைத் தூண்டிவிடுகிறது. 'பலர் இந்த உலகத்தில் பிற மனிதர்கள் ' என்பதே கடைசி அடியின் பொருள். இந்த அடியிலும் காட்சி மாற்றம் அமைந்துவிட்டது. புற உலகிலிருந்து அக உலகுக்குக் காட்சி மாற்றபட்டு விட்டது. வெளி உலகில் கால் வலிக்கும்படி நீண்ட தூரம் நடந்து போய்க் கூர்ந்து கவனித்ததில் தான் தேடி வந்தவர்களைப் போல வேறு பலரைச் சந்திக்க முடிந்து. எனவே

தன்னைப் போல் கவலை, பிரச்சனை உடையவர்கள் வானத்தில் உள்ள நட்சத்திரங்களை விட அதிக எண்ணிக்கை உடையவர்கள் என்பது முதல் நிலை அனுமானம். பலரே என்பதற்கு இரண்டு பொருள் உண்டு. i)தன்னைப் போலத் தேடி வந்தவரும் பலர். ii)காதலன் காதலியுமாக ஓடிப்போன வரும் பலர். ஆனால் வாக்கியம் இரண்டாவது பொருளையே வலியுறுத்தும். பெற்றோர்கள் சம்மதிக்காவிட்டால் காதலர்கள் ஓடிப்போவார்கள். இது உலகத்து இயல்பு. எனவே தன்னுடைய பிள்ளை ஓடிப்போனது தனக்கு இழிவு இல்லை என்பது இரண்டாம் நிலை அனுமானம். இவைகளுக்கெல்லாம் மூல காரணம் கண்ணே. எனவேதான் கண்ணே என்ற முதலடியின் அடிவிட்டிசை அதிகக் குறிப்புப் பொருள் உடையது என்று ஆகிறது.

4.3 முடிவுரை

யாப்பு இலக்கணப்படி அமைந்த பாடல்களிலும், அடியின் மொத்த எண்ணிக்கையும் ஒரு அடியின் சீர் எண்ணிக்கையும், அந்தந்தப் பாவின் இலக்கணப் படியே கீழ் எல்லையும், மேல் எல்லையும் உடையதால் புலவனுக்குத் தன் கருத்துணர்வுக்கு ஏற்ப அடி எண்ணிக்கையும், ஒரு அடியில் சீர் எண்ணிக்கையும் தேர்ந்தொடுக்க வாய்ப்பு உண்டாகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட வாய்ப்புகள் இருந்து ஏதேனும் ஒன்றைத்தேர்ந்தெடுக்கும் போது அவன் கருத்துணர்வும் கலந்துவிடும். எதனால் யாப்பு இலக்கணம் கட்டுப்பாட்டோடு, அவனுடைய கருத்துணர்வும் சேர்ந்தே பாட்டின் வடிவம் அமைகிறது என்பது தெளிவுபடுகிறது. இதனாலேயே கவிஞனின் கருத்துணர்வே பாட்டின் வடிவத்தை நிர்ணயிக்கிறது என்ற தீவிரவாதமும் ஆய்வுலகில் காணப்படுகிறது.

ஒவ்வொரு சீருக்கும் அடிக்கும் பிறகு விட்டிசை அமைவது இயற்கையானது. உலகப் பொதுவானது. எனவே கவிஞன் தொடர் கட்டில் எங்கு விட்டிசை அமைக்கிறான் என்பது யாப்பிலக்கணம் மட்டுமல்லாது அவனுடைய கருத்துணர்வும் தீர்மானிக்கிறது. எனவேதான் சீர் அமைப்பும் அடி அமைப்பும், குறிப்புப் பொருள் உடையதாகிறது. அதனால் கவிதையின் அடி அமைப்பைத் தொடர் கட்டு நோக்கில் ஆராய்ந்து விட்டிசை அமைந்திருக்கிற முறையை ஆராய்வது இலக்கியச் சுவையை அதிகரிக்கச் செய்யும்.

துணையன்கள்

1. கோதண்டராமன். பொன் (பொற்கோ) 1992
'தமிழ் யாப்பில் பிணை புலமை ' 18.7.59 71
2. கோதண்டராமன். பொன் (பொற்கோ) 1995 புதிய நோக்கில் யாப்பு - சென்னை
3. சண்முகம் செ. வை. 1995 சொல்லிலக்கணக்கோட்பாடு (வினையும் இடையும்) சென்னை
4. தொல்காப்பியம் எளியவுரை
(பதிப்பு. சொ. சிங்காரவேலன்) மயிலாடுதுறை 1988
5. தொல்காப்பியம் பொருளதிகாரம்
இளம்பூரணர் உரையுடன், கழகப்பதிப்பு, சென்னை 1986
6. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பிற்பகுதி
பேராசிரியர் உரை அண்ணாமலைப் பல்கலைக்கழகப்பதிப்பு, அண்ணாமலை நகர் - 1985
7. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல்
நச்சினார்க்கினியர் உரை - கழகப்பதிப்பு
8. பாட்டும் - தொகையும் - சென்னை 1965
9. யாப்பருங்கலக் காரிகை (பாடநுண்பதிப்பு) அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு - அண்ணாமலை நகர் 1995
(பதிப்பர் சு.சுவாமி ஐயா)
10.குறுந்தொகை மூலமும் உரையும் (உரை பொ.வே.சோமசுந்தரனார்) கழகப்பதிப்பு - சென்னை 1955
11.திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் கழகப் பதிப்பு- சென்னை 1973

(முற்றும்)

கல்லெழுத்தும் புல்லெழுத்தும்

பேரறிஞர் அ.மா.பரிமணம்

உலகில் நாகரிகம் மிக்கதாய் இன்றும் வழக்கில் இருந்துவரும் எந்த ஒரு மொழியின் தோற்றத்தை ஆராய்ந்து அதன் காலத்தைத் துல்லியமாகக் கணித்துக் கூறுவது அரிய செயலாகும். தமிழ் மொழியும் அவ்வாறு விளங்குவதனை, 'இவள் என்றுபிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்' என்று கவிஞர் போற்றுவராயினர். அதனால் சமயப்பற்று மிக்குடைய பாவலர், 'தமிழ்மொழி சிவபெருமானால் அருளப்பட்டது ' என்று கூறினர். "கல் உருவாகி மண்உருவாகாத காலப் பழமையது" என்றும், "மாந்தர் தம் உளக்கருத்தைக் கைச் சைகையால் உணர்த்திய காலம் மறைந்து, நாவால் ஒலி எழுப்பி உணர்த்தத் தொடங்கிய காலத்தில் தோன்றிய பழமையுடையது " என்றும் கூறும் காலவரையறைகளெல்லாம் தமிழ்க் கவிஞர்களின் உள்ளத்தில் தம் தாய் மொழியின் காலப் பழமையினை உணர்த்த எழுந்த, கவிதை வளஞ்சான்ற கற்பனை யூகங்களே யாகும்.

தமிழ்மொழியின் தோற்றக்காலத்தினைப் போலவே, அம்மொழியில் எழுத்துக்கள் தோன்றிய காலத்தையும் கணிப்பது அரிதாகவே உள்ளது. மக்களுள் ஒரு சாரார் தம்முட் பேசியமொழி தெளிவும் வளமும் பெற்ற நிலையில், அம்மொழிக்கொரு பெயரும் அம்மொழி பேசுவோருக்கு அம்மொழி அடிப்படையில் இனப்பெயரும் அமைவது இயல்பாகும். தமிழ்மொழி, தமிழினம், தமிழகம் என்பன அவ்வகையிலமைந்த பெயர்களாகும். இனத்தவர் பேசும் மொழிக்கருத்துக்கள் காற்றொடு கலந்து கரைந்துவிடாமல் நிலைத்து நின்று காலந்தொறும் தோன்றும் அவ்வின மக்கட்குப் பயன்படவேண்டும் என்ற எண்ணம் தோன்றியபோது, ஒலிவடிவில் உலவிய மொழிக்கு வரி வடிவிலாகும் ஒலிக்குறியீடுகளைத் தேர்ந்து கொள்வது இன்றியமையாததாயிற்று. ஒரு பொருளை ஒரு மொழியில் குறிப்பிட்ட ஓர் ஒலித்தொகுப்பால் உணர்த்த, அதே பொருளைப் பிற ஒலித்தொகுப்பால் உணர்த்துகின்ற போது, வெவ்வேறு மொழிகள் தோன்றுகின்றன. ஒலி வேறுபாட்டால் மொழி வேறுபடுவதுபோல, பொருளை உணர்த்தும் ஒலித்தொகுதியின் வரிவடிவங்களும் வேறுபடுகின்றன. மொழியின் ஒலிவடிவம் செவிப்புலனால் மட்டும் உணரத்தக்கது. அதன் வரிவடிவம் கட்புலனால் காணத்தக்கது. இன்றைய நாள் அறிவியல் சாதனங்களால் பதிவு செய்யப்பட்டாலன்றி ஒலிவடிவம் காற்றோடு கலந்து அழிந்துவிடும். வரிவடிவம் அதனைத் தாங்கியுள்ள பொருட்களுக்கேற்ப நெடுங்காலம் நிலைத்து நிற்கும் இயல்பினதாகும்.

தமிழ்மொழியின் வரிவடிவம் கிறித்து பிறப்பதற்குப் பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே செவ்விய நிலையில் இருந்து வந்துள்ளது. இன்று கிடைத்துள்ள தமிழ் நூல்களுள் முதற்கண்ணாக விளங்கும் தொல்காப்பியம் தமிழ் மொழியின் ஒலிவடிவிற்கான ஒலிகள் தோன்றும் தன்மையினை இக்கால மொழியியலாரும் வியந்து போற்றும் வண்ணம் தன் பிறப்பியலுள் விளக்கியுள்ளது. தமிழின் ஒலிவடிவிற்கான எழுத்தொலிகளின் பிறப்பினைக் கூறியுள்ள அளவு விளக்கமாக அதன் வரிவடிவினைப் பற்றிக் கூறவில்லை. எனினும், எகரமும் ஒகரமும் மெய்யெழுத்துப் போலப் புள்ளிபெறும், மெய்யெழுத்துக்களெல்லாம் புள்ளிபெறும் என்றிங்ஙனம் வரிவடிவம் பற்றியும் கூறியுள்ளமை நினைத்தற்குரியது. இதனால் ஒரு

மொழியின் ஒலிவடிவம் உடம்பினுள் உயிர் போல இன்றியமையாதது என்பதனையும், வரிவடிவம் உடம்பிற்குச் சட்டைபோல மாறி அமையவும் கூடும் என்பதனையும் உய்த்துணரலாம். மொழிக்கு ஒலிக்காப்பு இன்றியமையாதது. காவாதொழியின், சங்ககாலத்தே தமிழ் வழங்கிய சேர நிலம் அளவுகடந்த பிற மொழி ஒலிக்கலப்பிற்கு இடந்தந்தமையால் மொழியே மாற்றமெய்தி வேற்றுமொழி வழங்கும் நிலமாகிவிட்டது போலாகிவிடும். அதனால் தமிழ்மொழிக் காப்புக்குரிய இலக்கணம் வகுத்த தொல்காப்பியர், தமிழில் பிற மொழிச் சொற்கள் வந்து கலக்க நேருங்கால் அப்பிறமொழி ஒலிகள் தங்கள் இயல்பின் நீங்கித் தமிழ் ஒலிக்கு ஏற்ப மாற்றமெய்தி வரல் வேண்டும் என்று விதி வகுப்பாராயினார்.

வரிவடிவம் பெற்ற மொழி எழுதப்படுங்கால், அம்மொழி வழங்கும் பகுதியில் எழுதுவதற்கு வாய்ப்பாகக் கிடைக்கும் பொருட்களில் உரிய கருவிகளைக் கொண்டு எழுதத் தொடங்கியிருத்தல் வேண்டும். பழங்காலத்தே உலகின் பல்வேறு பாகங்களில், பச்சைக்களிமண், ஓடு, சில வகை மரப்பட்டைகள், தோல்வகைகள் பேபரைசு எனும் தாவரப் பொருட்கள் போல்வன எழுதுபொருட்களாகப் பயன்படுத்தப்பட் டுள்ளன.

தமிழகத்தில், பழங்காலத்திலிருந்து, அண்மைக்காலத்தே வேற்றவர்களால் தாள் அறிமுகப்படுத்தப்பட்ட காலம்வரை எழுதுபொருளாகப் பயன்பட்டு வந்தது பனையோலையேயாகும். தொல்காப்பியத்தில் தனியே குறிப்பிட்டு நூற்பா அமைக்குமளவு தமிழ் மக்களின் அன்றாட வாழ்வில் பயன்பட்ட பனையின் பயன்பாடுகளில், அதன் குருத்தோலை, பாடஞ் செய்யப்பட்ட நிலையில் எழுத்தாணி கொண்டு எழுதும் ஏடாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சில பொருட்கள் ஏடாகப் பயன்பட்டதனைக் காப்பியங்கள் காட் டுமாயினும், அவை நாள் வாழ்வில் அக்கால மக்களின் எழுத்துத் தேவையினை நிறைவு செய்யப் பயன்பட்டனவாகக் கருத இயலவில்லை. சிலப்பதிகாரத்தில், மாதவி, தன்னைக் கோவலன் விடுத்து நீங்கிய நிலையில் பிரிவுத்துயரால் வருந்தி அவனுக்கெழுதிய ஒரு மடலை இளங்கோவடிகள் காட்டியுள்ளார். அதில் அவர் வெள்ளிய தாழை மடலாகிய ஏட்டில் பித்திகை அரும்பினை எழுத்தாணியாகக் கொண்டு அதனைச் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து, உதறிப்பின்

எழுதினாள் எனக் குறிப்பிட்டுள்ளார். காப்பிய அழகினை மிகுத்துக் காட்ட இதுபோலும் ஏடுகள் பயன்படலாமேயன்றி, நாள் வாழ்வில் அன்றாடத் தேவைக்குப்பயன்படா என்பதனை ஒருவாறு உணரலாம். இதிலிருந்து பனையோலையில் எழுத்தாணியாற் கீறி எழுதப்படுவதேயன்றி, ஓவியம் தீட்டுவதுபோல, வழுவழுப்பான பரப்பில் வண்ணக் குழம்பு கொண்டு, தூரிகையால் எழுதும் முறையும் பொருட்களும் இருந்துள்ளன என்பதனை ஊகிக்கலாம்.

பனைமரம் புறக்காழுடைய வகையதாகலின் புல் என்னும் இனத்தைச் சார்ந்ததாகக் கொள்ளப்படும். அம்மரத்தின் வெள்ளிய இளங் குருத்தோலையைத் 'தாலப்புல்லின் வால்வெண்தோடு' என்று இளங்கோவடிகள் குறிப்பார். அதுவே ஏடாக எழுதப்பயன்படும். ஓலையின் இருபுறங்களிலும் எழுதத்தக்க பனையோலை ஏட்டினை எவ்வளவு பாதுகாப்பாகப் பேணிக்காத்து வந்தாலும், பயன்படுத்தாமல் பொதிந்துவைத்துக் காத்துவந்தாலும் குறிப்பிட்ட காலத்திற்குமேல் அது பயன்படுத்த முடியாதவாறு சிதைவடைந்து விடக் கூடும். அந்நிலைக்கு முன்னர் அவ்வேட்டுச் செய்தியினைப் பிறிதொரு ஏட்டில் பெயர்த்தெழுதிக் காத்து வருவர். அதனால் ஒரு காலத்தில் ஓலையிலுள்ள வரிவடிவம் பெயர்த்தெழுதப்படும் காலத்தில் வழங்கும் வரிவடிவத்தில் எழுதப்படும். எனவே ஓலையில் எழுதப்பட்டன காலந்தோறும் புதுப்பிக்கும் போது அவ்வப்போதுள்ள வரிவடிவத்திலமைந்து அவ்வக்கால மக்களால் எளிதாகப் படித்துணரும் நிலையில் அமைந்து பயன்பட்டன. கவிஞர்களின் படைப்புக்கள், அரச ஆணைகள், ஆலயங்கள் போன்றவற்றிற்கு வழங்கப்பட்ட நிபந்தங்கள் போல்வன ஓலைகளில் எழுதப்பெற்றுக் காக்கப்பெற்றன.

அத்தகு ஆவணங்கள் பன்னெடுங்காலம் நிலைத்துநின்று, பலரும் கண்டு படித்துப் பயன் கொள்ளுமாறு அமையவிரும்பிய நிலையில், சிலகாலமே இருந்து அழியும் ஓலையின் வேறாக எழுது பொருளாகப் பிறிதொன்றினை நாடவேண்டியதாயிற்று. அந்நிலையில் தமிழ் மக்களுக்குக் கிடைத்த சாதனமே கற்களும் சிற்றுளிகளுமாகும். எழுதப்பட்ட ஓலைகள் எழுத, படிக்க, எடுத்துச் செல்ல இலகுவாகயிருக்க எழுத்துப் பொறிப்புடைய பாறைகளும் கற்களும் அங்ஙனமில்லாமல் ஒரே இடத்தில் இருப்பனவாயின. இதனால்

கல்லெழுத்தும் புல்லெழுத்தும் (பனையோலைச்சுவடி) தமிழ் மக்களுக்குப் பயனளிப்பனவாயின. மேலும் சிறப்பான ஆவணங்களை உலோகத்தில் வெட்டி அமைக்கும் நிலையும் உருவாயின. அதனால் இடைக்காலக் கல்வெட்டுகள் சிலவற்றின் இறுதிப்பகுதியில் 'கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க' எனும் அனுமதி வாசகம் இடம்பெறக் காண்கிறோம்.

சங்க காலத்திலோ அதற்கு முன்னரோ எழுதப்பட்டதாகக் கருதப்படும் ஓலைகள் எவற்றையும் இன்று காணமுடியாது. காலந்தோரும் ஓலைகளில் பெயர்த்தெழுதப்பட்டு இக்காலத்தே அச்சுவாகனம் பெற்று விளங்கும் சங்க இலக்கியங்களையே காண முடிகின்றது. அண்மையில் படித்தறியப்பட்ட புகளூர்ப் பாறை எழுத்துக்கள் சங்க காலத்தைச் சார்ந்தவை என்று தெளியப்பட்டுள்ளன. பழங்கால நடுகற்கள் சிலவற்றில் அப்பழைய எழுத்துக்களைக் காணலாம். பல்லவர்கால ஆட்சியிலும், அதன் பின்னர்த் தோன்றிய ஆட்சிகளின் காலத்திலும் கோயிற் சுவர்களை ஏடாகக் கொண்டு பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் விரிவான அளவிலும், மிக்க அளவிலும் உள்ளன.

கல்லெழுத்துக்கள் வேண்டுமென்றே உளிபோலும் கருவிகளைக் கொண்டு அழிக்கப்பட்டால், அல்லது அவை பொறிக்கப்பட்ட சுவர்கள் போன்றன அழிக்கப்பட்டாலன்றி, அவற்றிற்குச் சேதம் ஏற்பட வாய்ப்பில்லை. அதனால் கல்லெழுத்துகளில் பாடபேதங்கள் தோன்ற வாய்ப்பில்லை. கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்ட கோயிற் சுவர்கள் பிரிக்கப்பட்டுப் புதிதாகக் கட்டப்படுவனவாக இருந்தால், அவற்றைப்படியெடுத்துப் பாதுகாத்துப் பின் புதிய சுவர்கள் அமைந்தபின் அவற்றில் மீண்டும் பொறித்து ஒப்பு நோக்குவது மரபாதலின் அவ்வகையிலும் பாடபேதங்கள் தோன்ற வழியில்லை. ஏனெனில் ஒப்பு நோக்கி வெட்டப்பட்ட கல்வெட்டே பின்னர் மூலக்கல்வெட்டாகிவிடுகின்றது. ஆனால், காலந்தோறும் தமிழ் வரிவடிவத்தில் தோன்றிய மாறுபாடுகளாலும், கல்வெட்டில் இடம் பெற்ற சொற்கள் அல்லது வழக்குகள் பின்னர் வழக்கிறந்து போகும் வாய்ப்புண்மையாலும் அவற்றைப் படிப்போர் பொருள் கொள்வதில் வேறுபாடு தோன்றலாம். 'காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளி' என்னும் கல்வெட்டுத் தொடருக்குப் பொருள்காண்பதில் அத்துறை அறிஞர்கள்

மாறுபடுவது இதற்குச் சான்றாகும்.

மாமன்னன் இராசராசன் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் தான் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் நித்திய நைமித்திய காலங்களில், ஆடற்றொண்டு புரிவதற்காகச் சோழ மண்டலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 400 ஆடன் மகளிரைக் கொணர்ந்து நியமித்து அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்த செய்தியினை அவனது கல்வெட்டொன்று விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்தியம்புகின்றது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக அக்கல்வெட்டினைப் படித்து ஆராய்ந்தனர் என்பதனைக் கூறவியலாது. படித்தார்களா என்பதும் ஐயமே! நூறு ஆண்டுகட்கு முன்னர் சென்னை மாநிலக்கல்வெட்டு ஆய்வாளராகப் பணிபுரிந்த அறிஞர் கூல்சு அவர்கள் 1891 இல் தஞ்சைக் கோயில் கல்வெட்டுக்கள் பலவற்றையும் படியெடுத்துப் படித்தறிந்து பதிப்பித்துள்ளார்கள். அவருடைய கல்வெட்டுத் தொண்டிற்குத் தமிழுலகம் நன்றிக் கடன்பட்டுள்ளது. பின்னர் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களும், டாக்டர் நாகசாமி அவர்களும் அப்பதிப்பை அப்படியே ஏற்றுக்கொண்டு தத்தம் கருத்துக்களை விளக்கியுள்ளார்கள். அண்மையில் திருச்சியிலுள்ள டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மைய ஆய்வாளர்கள், நானூறு ஆடல் மகளிர் நியமனக் கல்வெட்டைக் கண்டும், படித்தும் கருத்துரைத்துள்ளார்கள். முந்தைய மூவர் கொண்ட சில பாடங்களையும் தந்த விளக்கங்களையும் மறுத்துரைத்துக்கும் இவர்களின் சில முடிவுகளைப் பார்க்கும்போது அவை, படித்தல் வேறுபாட்டால் ஏற்பட்டவையேயன்றிப் பாடவேறுபாட்டால் ஏற்பட்டனவாகா என்பது நன்கு புலப்படும். கல்வெட்டின் ஓரிடத்தில் ஒரு இசைக்கருவியின் பெயராகலாம் என்று கருதத்தக்க சொல்லை முன்னை மூவரும் "மொ...வியம" என்று கொண்டனர். தெளிவாகத் தெரியாத எழுத்தினைப் புள்ளியிட்டுக் காட்டியுள்ளனர். புள்ளியிட்ட இடத்திலுள்ளது "ர" என்று கருதியுள்ளனர். இந்நிலையில் "மொரவியம்" என்பதனை, மெராவியம் என்றும், மேராவியம் என்றும், மொரவியம் என்றும் மொராவியம் என்றும், மோர்வியம் என்றும், மேராவியம் என்றும் படிக்கலாம். திருச்சி ஆய்வாளர்கள் "மெராவியம்" என்று கொண்டு இக்காலத்தே அதன் பொருள் விளங்கவில்லை என்று குறிப்பிட்டனர். தஞ்சைக் கல்வெட்

டாய்வாளரொருவர் அதனை "மோர்வியம்" எனப் படித்து "ஆடுமகளிர் ஆடுங்கால் மத்தளம் இயக்குமொருவனும் குறுங்குழல் ஊதும் ஒருவனும் இருப்பர். கோயிற் சுவர்களில் பலவிடங்களில் காட்டப்பட் டுள்ள ஆடலில் இம்மூவர் இருப்பதனைப் பெரும்பாலும் காணலாம். அதனால் இக்காலத்தே முகவீணை எனக் கூறத்தக்க குறுங்குழலே "மோர்வியம்" எனக் கல்வெட்டில் உள்ளது" என்று விளக்கியுள்ளார். தமிழிலக்கியங்களிலும் தமிழக வழக்கிலும் காணவியலாத இப்பெயரினை நினைவூட்டும் வகையில், "மொர்வியம்" என இக்கருவி ஆந்திரப் பகுதியில் வழங்கப்படுகிறது என்றும் காட்டியுள்ளார். இவற்றால் கல்லெழுத்துக்களில் பாடபேதம் தோன்றும் வாய்ப்பில்லை என்பதும், எனவே அவற்றைப் படிப்போரும் பொருள் கொள்வோரும் விழிப்புடனில்லாவிட்டால் பொருட்பேதம் தோன்றி மயங்கக்கூடும் என்பதும் நினைவிற்கொள்ளத்தக்கனவாகும். கல்வெட்டிற் கூறப்படுவன வரலாற்றுச் செய்திகளாதலின், அதனை ஆராய்வோர், வரலாற்றுப் பிழை நேராவண்ணம் தங்கள் ஆய்வினை மேற்கொள்வது கடமையாகும்.

ஓலைச் சுவடிகளைப் பெயர்த்தெழுதுவதில் பிழைகளும் பாடபேதங்களும் தோன்ற வாய்ப்புக்கள் மிகுதியாக இருந்தன. தம் ஆசிரியரிடம் உள்ள ஏடு, நல்ல நிலையில் மேலும் பலவாண்டுகள் பயன்படத்தக்க நிலையில் இருந்த போதிலும், தமக்கென ஒரு படி சொந்தமாக இருத்தல் வேண்டுமென்னும் விருப்பத்தால் மாணவர்கள் பிரதிசெய்து கொள்ள முற்படலாம். இராமாயணம் போன்ற சமயஞ் சார் நூல்களைப் பிரதி செய்வதனை ஒரு நேர்த்திக்கடனாகக் கொள்வதும், அதற்காகப் பிரதி செய்து கொடுப்பதனைத் தொண்டாகவும் தொழிலாகவும் மேற்கொள்வதும் இருந்து வந்துள்ளன. அத்தகு சூழலில் பிரதி செய்வோர் போதிய கல்வி இல்லாமை, கவனக்குறைவு போன்றவற்றால் ஏட்டில் பிழைகள் ஏற்படலாம். அங்ஙனம் நேர்ந்த பிழைகளுட் சில பொருளுடையனவாக அமையுமிடத்து அவை பாடபேதங்களாகி, ஏற்றுக்கொள்ளவும் படலாம். நாட்டின் ஒரு பகுதியினரிடம் உள்ள மூல ஏடு கொண்டு எழுதப்பட்ட பிரதிகளுக்கும் பிறபகுதிகளிலுள்ள மூல ஏடுகள் கொண்டு எழுதப் பட்ட பிரதிகளுக்கும் இடையே சிற்சில மாறுபாடுகள் காணப்படலாம்.எழுத்துக்களின் சிறுசிறு வேறுபாடுகளால் படிப்போர்

பிறழநோக்கிப் படித்துவிடவும் கூடும். இவ்வகையில் அமையும் பிழைகள் பாடபேதங்களைக் கணித்த, செவ்விய உண்மைப்பாடங்களைத் தேர்ந்து படிப்பதில், பதிப்பாளர்கள் விருப்பு வெறுப்பற்றவராய், உண்மை கண்டுணர்த்தும் வேட்கையராய்ப் பதிப்பறம் பிறழாப் பண்பாளராய் இருத்தல் வேண்டும். அவ்வகையில் சங்க நூற் பதிப்புமுயற்சியில் ஈடுபட்டு, பதிப்பாசிரியர்கட்கோர் உறையாணியாக விளங்கிய பெருமை டாக்டர் உ.வே.சா.ஐயரவர்களைச் சாரும்.

கம்பராமாயணத்திற்குச் செவ்விய, நேரிய பதிப்பு வெளிவர வேண்டும் என்னும் முயற்சியில் ஈடுபட்ட மர்ரே எஸ்.இராஜம் என்பார், ஏடு பார்க்கும் பயிற்சியுடையாரடங்கிய ஒரு குழுவினை அமைத்து நூல் முழுவதையும் வெளியிட்டுள்ளார். (அவ்வெளியீடு செம்பதிப்பு வெளி வருதற்கு உதவும் வகையில் தமிழறிஞர்களின் - கம்பராமாயண ஆர்வலர்களின் - கருத்தறிவதற்காக வெளியிடப்பட்டதாகும். அதனால் படல எண்ணன்றிக் காண்டத் தொடரெண் அல்லது நூல் தொடரெண் காட்டப்படவில்லை. மிகைப்பாடல்கள் காண்ட இறுதியில் தரப்பட் டுள்ளன. நூலைப் பெற்றவர் எவரும் கருத்துரைக்காததாலும், பதிப்பு முயற்சியில் தொய்வு ஏற்பட்டதாலும் செம்பதிப்பு முயற்சி தொடராது போயிற்று.)

கம்பராமாயணப் பால காண்டச் செய்யுளொன்றில் 'பதவுகைத் தொழில்' என்பதாக ஒருதொடர் காணப்பட்டது. அதற்குப் பல பாட பேதங்களும் பொருட்களும் கூறப்பட்டிருந்தன. அவற்றால் நிறைவெய் தாத பதிப்புக் குழுவினர் ஒருநாள் முழுவதும் பல ஏடுகளில் தேடியும் மனநிறைவெய்தவில்லை. நம்பிக்கை மிக்க ஓரேட்டில் 'பதயுகத்தெழில் கெட' எனும் பாடம் கிட்டியது. ஆனால் அதன் பொருளை அறிவதில் சிரமம் ஏற்பட்டது. 'பதயுகம்' என்பது 'அடியிணை' என்று பொருள்படுவதனை அறிந்தவுடன் மகிழ்வோடும், மனநிறைவோடும், அப்பாடத்தினை ஏற்றுப் பதித்தது. இதனால் ஓலைச்சுவடிகளில் பல காரணங்களால் பிழைகளும் பாடபேதங்களும் தோன்றின என்பதனையும், நேர்மையான பதிப்பாளர்கள் தம்மால் இயன்ற அளவு நேர்மை காத்தும் பதிப்பறம் பேணியும் பண்டை நூற்செல்வங்களை நமக்குப் பயன்படும் வகையில் வெளிப்படுத்தியுள்ளனர்

என்பதனையும் உணரலாம்.

இந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே பனையோலையும் எழுத்தாணியும் தம் சேவையினை நிறைவுசெய்து, காட்சிப் பொருட் களாகப் பொருட் காட்சியகங்களில் புகலிடம் பெற்றுவிட்டன. தமிழகத்து ஓலைச்சுவடி நூலகங்களில் இடம் பெற்ற அவை இனிவரும் நூற்றாண்டுகளில் மறைந்து விட்டால் வியப்பதற்கில்லை.

இன்று ஓலை எழுத்துக்கட்கு நாள் வாழ்வில் இடமில்லை எனினும் கல்லெழுத்துக்கள் அங்ஙனமின்றி, இல்லப்பெயர்கள், கட்டிடக் கால்கோள் விழாக்கள், கல்லறைகள் போன்றவற்றில் இடம்பெற்று விளங்குகின்றன. அரண்மனை, ஆலயங்கள் போன்றவற்றின் ஆவணங்களை மட்டுமேயன்றி ஒரு முழு நூலினையே கல்லிற் காத்துத் தந்த பெருமை கல்லெழுத்திற்குரியதாகும். சிராமலை அந்தாதி எனும் ஒரு முழு நூலே (104 வெண்பாக்கள்) பல்லவர்காலக் கல்லெழுத்தாகக் கிடைத்துள்ளது. திருவிடைவாய் என்னும் தலத்தின் தேவாரப் பதிகம் ஓலைச்சுவடியில் கிடைக்காமல் அவ்வூர் கோயிற்சுவர்க் கல்வெட்டில் கிடைத்துள்ளது. இன்றும், மதுரை மீனாட்சி அம்மன் கோயிற் பொற்றாமரைக் குளக்கரைச்சுவர், சென்னை வள்ளுவர் கோட்ட உட் புறச்சுவர்கள் போல்வன திருக்குறள் முழுவதையும் தாங்கி விளங்கு வதனைக் காணலாம்.

கல்லிலும் புல்லிலும் (பனையோலை) கால்கொண்டு பயனளித்த தமிழ் வரிவடிவம் காலந்தோறும் சிற்சில மாற்றங்களை ஏற்றுவந்துள்ளது உண்மைதான். அதனால் சங்கச் சேரன் இரும்பொறை கால எழுத்தினை இராசராசன் காலத்தவராலும், இராசராசன் கால எழுத்தினை இக்காலப் பொதுமக்களாலும் படித்தல் இயலாது போயினமைக்கு வரிவடிவ மாற்றங்களே காரணங்களாகும். இன்று திருவள்ளுவர் நம்முன் வரக்கூடுமாயின், நாம் படிக்கும் திருக்குறள் புத்தகத்தை அவரால் படிக்க இயலாது, அவ்வாறே அவரது கையிலிருக்கும் திருக்குறள் ஏட்டினை நம்மால் படிக்க முடியாது! இந்நிலை தமிழ் மொழியின் வரிவடிவத்தில் அவ்வப்போது ஏற்பட்ட மாற்றங்களின் பயனாகும். திருவள்ளுவர் நம்மொடு உரையாடினால் அதனைப் பெருமளவில் உணர்தல் கூடும். ஆனால் நாம் உரையாடுவதனை முற்றிலும் உணர்ந்துகொள்வதற்கு அவர் மிக்க சிரமம் எய்துவர். காரணம், பேச்சு வழக்கில் நாம் மேற்கொண்டுள்ள

பிற ஒலிக் கலப்புடைய வேற்றுமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதாகும். எனவே மொழியின் ஒலி வடிவமும் வரிவடிவமும் கலப்பெய்யதாவண்ணம் காப்பது இன்றி யமையாததாகும். இன்றேல் முன்னர்க் குறிப்பிட்டபடி பழந்தமிழகத்தின் ஒரு பகுதி மலையாளமானாற் போல இற்றை நாள் தமிழகத்திலும் புதியதொரு நாட்டுப் பகுதி தோன்றிவிடக்கூடும்.

இப்போதுள்ள தமிழ் வரிவடிவினை மேலும் மாற்றம் செய்தல் வேண்டுமென்று,பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி அமைப்புக்களில் செல்வாக்குடைய சிலர் தீவிரமாகக் கூறுவது சிந்திக்க வேண்டியதொன்றாகும். வரிவடிவில் மாற்றமே கூடாது என்பது கருத்தன்று. வேற்றுநாட்டவர், வேற்றுமொழியினர் என்று கருதாது வீரமாமுனிவர் செய்த பயன்மிக்க வரிவடிவ மாற்றத்தைத் தமிழுலகம் ஏற்றுக்கொண்டது. வரிவடிவில் பெரியார் செய்த மாற்றமும், பின்னர் அரசு செய்த மாற்றமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் மேலும் மாற்றம் செய்ய விரும்புவோர் கருத்தினை எண்ணிப் பார்த்தல் வேண்டும். வளரும் அறிவியல் யுகத்தில் கணிப்பொறி வளர்ச்சிக்குத்தக நம் தமிழ் வரிவடிவம் மாற்றப்படவேண்டும். இல்லையேல் வளர்ச்சி நிலையில் பின்தங்கி விடுவோம் என்பது அவர்கள் வாதம். அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்தி இருக்கின்ற வரி வடிவத்தைப் பயன்படுத்தியே அவர்கள் கூறும் நன்மையை அடைய வழிகாண்பதே சரியானதாகும். தலைக்கு ஏற்பக் குல்லாவை அமைப்பதே சிறந்தவழி. வரிவடிவமாற்றமில்லாமல் அறிவியலின் சாதனையால் கணிப்பொறியினைத் தக்க வகையில் மாற்றிப்பயன்படுத்தினால் பெருநன்மை பயக்கும். பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள், தனியார் இல்லங்களில் இடம்பெற்றுள்ள இலட்சக்கணக்கான நூல்கள், அழியாமல் பயன்படும். அதைவிடுத்துக் கணிப்பொறிக்காக வரிவடிவத்தை மாற்றினால் அந்தமாற்றம் இன்னாரால் ஏற்படுத்தப்பட் டது என்னும் புகழ் தவிர, அடையும் பெரும் பயன் இன்றாகும். இருக்கும் எண்ணற்ற புத்தகச் செல்வம் பயனின்றி அழிவெய்தக் கூடும். இப்போதே சிலர் வரிவடிவ மாற்றம் பற்றிய நூல்கள் எழுதித் தத்தம் முறையே சிறந்தது என்று கூவுகின்றனர். தமிழ் வரிவடிவ மாற்ற முயற்சியை விடுத்துக் கணிப்பொறியை நம் வரிவடிவிற்கு ஏற்ப

அமைக்கும் முயற்சியில் அறிஞர்கள் முற்படுவது சிறந்தது. இருபத்தாறு ஆங்கில எழுத்திற்கான எழுத்துப் பலகையில் (Key Board) அதனின் மிக்க எண்ணிக்கையில் எழுத்தினைக் கொண்ட தமிழ் மொழியைத் தட்டச்சுப்பொறியில் அடக்கவில்லையா?

மேலும், தமிழினும் மிக்க எழுத்துக்களைக் கொண்ட தெலுங்கு, கன்னடம், மலையாளமேயன்றி, இந்தியும் எண்ணிக்கையைக் குறைக்கவோ, கணிப்பொறிக்கேற்ப மாற்றஞ் செய்யவோ முற்படவில்லையே!

கல்லும் புல்லும் எழுத்தின் களங்களாக இருந்த நிலை மாறி, தாள், எழுதுகோல், தட்டெழுத்து, உருளச்சு, செராக்சு, கணிப்பொறி என்னும் சாதனங்களின் பயனை எய்திய நிலை தோன்றியுள்ள இந்நாளில் தமிழின் வரிவடிவத்தில் புதிய மாற்றங்களைத் திணிக்க முற்படுவது தேவையற்றதாகும்.

'கடுஞ்சூல்' - "முதற்சூல்"

தெ.முருகசாமி

'கடுஞ்சூல்' என்பதற்கு "முதற்சூல்" என நச்சினார்க்கினியர் கூறிய பொருளை மறுப்பதுபோல் 1996 சூலைத்திங்கள் செந்தமிழில் எழுதிய பேரறிஞர் மதிப்புமிகு சௌந்தர பாண்டியனாரின் விளக்கங்கள் பெரும்பாலும் பொருந்தா என்றே கூறலாம்.

முதலில் கருவுற்றதைத்தான் "சூல்" எனக் கூறுவது தமிழ் நாட்டின் வழக்கம். இம்முதற்சூலை வளைகாப்பு எனச் சிறப்பித்துக் கூறுவதும் நம் நாட்டின் வழக்கமாகும். அடுத்தடுத்துக் கருவுறும் பெண்ணைச் "சூல் கொண்டாள்" எனக்கூறுவது வழக்கமுமன்று. அப்படியே பொதுவாக ஒவ்வொரு முறையிலும் கருவுறுதலைச் சூல் எனக் கூறுவதாகவே கொண்டாலும் சூல் கொண்ட ஒவ்வொரு முறையிலும் வயிறுபுடைத்த தோற்றமும் துன்பமும் இருக்கவே செய்யும்.

ஆனால் அடுத்தடுத்த சூலை நோக்க முதற்சூலின் துன்பமும் (கடுமையும்) வயிறுபுடைத்த தோற்றமும் சற்று அதிகமாகவே இருக்கும் என்பது கருவுற்ற பெண்களால் உணரப்படும் உலகியல் உண்மையாகும்.

ஏனென்றால் சூல்கொண்ட புது அனுபவமானது ஓர் புதுக்கிய அச்சத்தை உண்டாக்குவதால் மேற்படியான உண்மை

உணரப்படுவதென்பது பெண்கட்கு இயல்பே ஆகும்.

எனவே முதற்சூலின் அனுபவத்தால் அடுத்தடுத்த கருவுறுதலாகிய சூல்களில் ஏற்படும் கடுமை அவ்வளவாகத் தெரியாதென்பது உண்மையாதலால் "கடுஞ்சூல்" - முதற்சூலையே கொள்ளலாம் என்க.

இவ்வடிப்படை உண்மையை நோக்கினால் சொல்லுக்குச்சொல் பொருள் காண்பதைக் காட்டிலும் மிக நுட்பமாகச் சிந்தித்ததின் விளைவால் கண்டறிந்த உண்மையான முதற்சூலைக் கடுஞ்சூல் என்றது மனிதர்க்கு மட்டுமின்றிப் பேரறிஞர் அவர்கள் குறித்த விலங்குகளுக்கு (பசு, குரங்கு) ஏற்றிக் கூறினும் பொருந்தும் எனலாம்.

மேலும் தாவர வகையிலும் இப்புதுப் பொருளைப் பொருத்திக் கூறுவதிலும் ஓரளவு தவறில்லை என்றே உணரலாம்.

குறிப்பில் பேரறிஞர் அவர்கள் குறித்தபடி முள்ளிச்செடி பூக்கும் போது அஃதடையும் முதற்பூரிப்பை முதற்சூல் என்றல் தகுமன்றோ! ஏனென்றால் அடுத்தடுத்துப் பூக்குந்தோறும் செடியானது புடைத்துப் பூரிப்புடன்தான் இருக்குமெனினும் செடியின் முதற் பூரிப்பு சிறப்பிற்குரியதன்றோ!

இப்படிப் புதுப்பொருள் கூறுவதை வலிந்து பொருள் காண்பதாகக் கருதக் கூடாது. ஏனென்றால் வழக்கமாகக் கூறிவரும் பொருளைக் காட்டிலும் நுட்பமான சிறந்த பொருள் கூறினால் அஃது உயர்வுதானே!

எனவே கடுஞ்சூல் - முற்றியசூல் என்பதைவிட "முதற்சூல்" என்ற உரைநயம் சிறப்பானதாகும்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக்குறைந்த செலவில் அறிமுகப்படுத்தும்

மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக்குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்துகொள்ள அரிய வாய்ப்பு

திட்டத்தின் சிறப்பு பரிசோதனை

1. தலைமுதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்தப் பரிசோதனை
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி.

★ **இரத்தவகை**
★ **சர்க்கரை அளவு**
★ **சீரம் கிரியேட்டினைன்**
★ **கொலஸ்ட்ரால் அளவு**

கூடுதல் பலன்கள்

★ இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
★ இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு
★ இலவசமாக இரண்டுமுறை தலைசிறந்த நிபுணர்களால் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

இத்தனையும் ரூ.400/- செலவிலேயே

பெண்களுக்கு: பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ.50/- செலுத்தவேண்டும்.

தொடர்புக்கு

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்.

Only Private Hospital in South Tamilnadu Approved by State Govt. for Govt. Employees (G.O.Ms. No.490/19/6/95)

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை-625 107.

Ph: Call: 42481 (5 Lines) 535977 (3 Lines)

உயர்ந்த மருத்துவம், குறைந்த செலவில்

USHA GRAPHICS,
34, Subramaniya Pillai Street, S.S.Colony, Madurai-10. PH: 602896.